Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | மார்கழி 04 | 19 - 12 - 94 | திங்கட்கிழமை | ஓசை 304

## உகந்த நீர்ப்பயன்பாடு இல்லாவிடின் உலகில் உணவுப்பஞ்சம் உருவாகும்

உகந்த வகையில் நீர்ப்பாசன முகாமைத்துவம், நிலப்பயன்பாடு போன்றவற்றைக் கடைப்பிடிக்காவிடின் உலகில் விரைவில் உணவுப் பஞ்சம் ஏற்படும் என சர்வதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவனத்தின் ஆளுநர் சபைத் தலைவர் கலாநிதி எம். எஸ். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். உலகச் சனத் தொகையானது வருடாந்தம் ஒன்பது கோடியால் அதிகரிக்கிறது. ஆனால் பிரதான தானிய வகைகளின் உற்பத்தி 1980களின் நடுப்பகுதியில் இருந்து ஒரே அளவினதாகவே இருக்கிறது. அதே சமயம் உலகின் பயிர் செய்யக் கூடிய சகல நிலப் பரப்பும் பயன்படுத்தப்பட்டாகி விட்டது. இதனால் தொடர்ந்து அதிகரித்துவரும் உலகின் உணவு தேவையைச் சமாளிக்க குறைந்த நிலப்பரப் ல் குறைந்த நீரைப் பயன்படுத்தி அதிக விளைவைப் பெறும் மார்க்கங்களைக் கண்டு கொள்ள வேண்டும் என்றார்.

# சந்திரிகா அரசின் போர்நிறுத்த யோசனை; இணக்கம் தெரிவித்து தலைவர் பிரபாகரன் கடிதம்!

## போர்நிறுத்த வழிமுறைகள் பற்றி பேசுவதற்கு அரச குழு வருகிறது

(யாழ்ப்பாணம்)

முதற்கட்டமாக இரண்டுவார காலத்திற்கு போர் நடவடிக்கைகளை இடை நிறுத்தம் செய்வதற்கான சந்திரிகா அரசாங்கம் தெரிவித்த யோசனைகளைத் தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் ஏற்றுக் கொண்டுள்ளார். கடந்த வியாழக்கிழமை தலைவர் பிரபாகரன் சந்திரிகா அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இது தெரியப்படுத்தப்பட்டுள்ளதோடு, போர் நடவடிக்கைகள் இடை நிறுத்தத்தின்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் பற்றிப் பேசித் தீர்மானிக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த வாரத்தின் ஆரம்பத்தில், சந்திரிகா அரசாங்கம் தமிழீழத் தேசியத் தலைவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இரு வாரகால போர் நடவடிக்கைகளை இடைநிறுத்துதல் தொடர்பான ஆலோசனைகளைத் தெரிவித்திருந்தது.


இதற்கு கடந்த வியாழக்கிழமை பதில் அனுப்பிய தலைவர் பிரபாகரன், அரசாங்கம் தெரிவித்திருந்த போர் நடவடிக்கை இடைநிறுத்தம் தொடர்பான யோசனையை ஏற்றுக் கொண்டுள்ளார். இதேசமயம், இப்போர் நடவடிக்கை இடைநிறுத்தத்தின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுங்கு விதிகள் பற்றி இருதரப்பினரும் பேசித் தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவ்விவகாரங்கள் தொடர்பாக பேச்சுக்களை நடத்துவதற்கு அரசாங்கத் தூதுக்குழுவினர் 21ஆம் அல்லது 22ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இப்பேச்சுவார்த்தையானது ஒருநாள் மட்டுமே நடைபெறவுள்ளதாகவும், இதில் போர் நடவடிக்கை இடை நிறுத்தல் தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

இதை அடுத்து போர் நடவடிக்கைகளை இடை நிறுத்

(6ஆம் பக்கம் பார்க்க)



## இனப்பிரச்சினை தொடர்பான அரசின் கொள்கை முன்வைக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்றும் இது தொடர்பாக அரசாங்கத்தின் கொள்கைகள் மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனவும் அரசசார்பற்ற நிறுவனங்களின் சமாதானத்தை ஏற்படுத்தும் அமைப்பு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யுத்தம் உடன்நிறுத்தப்பட வேண்டும் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் போது பொதுமக்களிடம் பரஸ்பரம் புரிந்துணர்வும் நம்பிக்கையும்

[6ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நாணய நிதியத்துடன் ஐ.தே.க உடன்பாடுகளை வெளியிடுக

### நவசமசமாஜக் கட்சி கோரிக்கை

கடந்த 17வருடகால ஐ. தே. க. ஆட்சியின் போதுஅரசுசர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளை பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்று நவசமசமாஜக் கட்சி விடுத்த கோரிக்கையை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு நிராகரித்

நவசமசமாஜக் கட்சியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்கார மற்றும் பட்டி வீரக்கோன் ஆகியோர் இக்கோரிக்கையை முன் வைத்திருந்தனர் இந்த உடன்படிக்கைகள் வெளியிடப்படுவதன் மூலம்

பலமாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் தேசிய நலன்களில் அக்கறை கொண்டு இவ் உடன்படிக்கைகள் வெளியிடப்பட முடியாதவை என்று நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

## அரச தரப்புப் பிரதிநிதிகள் யார்? இன்றைய கூட்டத்தில் முடிவாகும்

## தாழமுக்கம்

(கொழும்பு)

# இன்றைய கூட்டத்தில் முடிவாகும்

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்த யாழ். செல்லவுள்ள அரசாங்கத் தரப்புக் குழுவினர் பற்றி இறுதி முடிவு இன்றைய அரசாங்க உயர் மட்டக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் எனத் தெரிய வருகிறது.

கடந்தவாரம் தலைவர் பிரபாகரன் அரசாங்கத்திற்கு எழுதியிருந்த கடிதத்தில், பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவுள்ள அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகளின் விபரத்தை அறியத்தருமாறு கோரியிருந்தார்.

இந்நிலையில் அரசாங்கத் தரப்பினர் யாழ்ப்பாணம் செல்லவுள்ள குழுவில் யார் அடங்குவர் என்பதை இன்று நடைபெறவுள்ள உயர்மட்டக் கூட்டத்திலேயே முடிவு செய்வர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இக்கூட்டத்தில் புலிகளுடனான பேச்சுவார்த்தையின்போது பேசப்படவேண்டிய விடயங்கள் குறித்தும் ஆராயப்படும் எனவும் தெரியவருகின்றது.

## தாழமுக்கம்

(கொழும்பு)

தமிழ்நாடு கடற்கரைக்கு அப்பால் மேற்கு மத்திய வங்கக் கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஒன்று உருவாகி இருப்பதாக வானிலை அவதான நிலையம் கூறியுள்ளது. மன்னார்க் குடாக் கடல் பகுதியில் இது தற்சமயம் நிலை கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

சமாஜக் கட்சி விடுத்த கோரிக்கையை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு நிராகரித்துள்ளது.

கையை முன் வைத்திருந்தனர் இந்த உடன்படிக்கைகள் வெளியிடப்படுவதன் மூலம் ஐ.தே.க வின் தவறுகள் அம்

கைகள் வெளியிடப்பட முடியாதவை என்று நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறி மறுத்துவிட்டார்.

# ராணுவத் தளபதியைக் கொல்வதற்கு கடந்தவாரம் முயற்சி நடந்ததாம்

[கொழும்பு]

சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வாவை கொலை செய்வதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டு இருந்ததாகவும், அதிலிருந்து அவர் தப்பிக் கொண்டதாகவும் கொழும்பிலிருந்து வெளியாகும் 'சண்டே லீடர்' இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அது மேலும் குறிப்பிடுகையில், விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவை சேர்ந்த முக்கிய நபர் ஒருவரை இராணுவத்தினர் கொலை செய்தமைக்கு பழிக்கு பழி வாங்கும் முகமாக இத்தாக்குதல் திட்டமிட்டு இருப்பதாகவும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெரி டி சில்வா வீட்டிலிருந்து அலுவலகத்துக்கு செல்லும் வழியில் வெடிமருந்து நிரப்பிய வாகனத்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தைகளுக்கான திகதியை இன்று அரசாங்கம் அறிவிக்கும்?

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இரண்டாம் கட்டப் பேச்சுக்கள நடைபெறுவதறகான திகதியும் இதில் பங்குபற்றும் அரசுதரப்பு பிரதிநிதிகள் விபரமும் இன்று கொழும்பில் வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும்சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் இவ்வாரம் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தெரிவதாக முதற்கட்டப் பேச்சுக்களில் கலந்துகொண்ட அரசதரப்பு பிரதிநிதிகளில் ஒருவரான ராஜன் ஆசீர்வாதம் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கு பயணம் மேற்கொண்டு கொழும்பு திரும்பிய இவர் பி.பி.சி செய்தியாளரைச் சந்தித்தபோது இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் அடுத்த கட்டப் பேச்சுக்களின்போது யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்வது தொடர்பாக இப்பேச்சுகள் அமையும் என தாம் எண்ணுவதாக அவர் மேலும் கூறினார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கு முகாம்களில் 400தமிழர்கள்தடுத்துவைப்பு

வடக்கு, கிழக்குப் பகுதியிலுள்ள இராணுவ முகாம்களில் சுமார் நானூறு தமிழர்கள் சந்தேகத்தின்பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேலும் சுமார் 404 தமிழர்கள் பல்வேறு சிறைகளிலும் சந்தேகத்தின்பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 47 பேர் களுத்துறைச் சிறையிலும், 9 பேர் வெலிக்கடைச் சிறையிலும், 239பேர் மகசின் சிறையிலும், 96 பேர் மட்டக்களப்பு சிறையிலும், 11பேர் திருக்கோணமலை சிறையிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

**வீரச்சாவு**



## கப்டன் சத்தியசீலன்

மன்னாரிலுள்ள வங்காலை சிறிலங்கா இராணுவமுகாம் காவலரண் கடந்த 10ஆம் திகதி விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டபோது

[6ஆம் பக்கம் பார்க்க]

# பாப்பரசரின் புத்தகம் தொடர்பாக திருச்சபை அறிக்கை விடும்

(கொழும்பு)

பாப்பரசர் புனித இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் எழுதியுள்ள புத்தகத்தில் புத்தபிரான் சம்பந்தப்பட்டுள்ள கருத்துத்தொடர்பாக இலங்கை கத்தோலிக்க திருச்சபை அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளது.

பாப்பரசரின் இலங்கை விஜயம் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள கமிட்டியும், தகவல் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள பத்திரிகையாளர் மாநாடொன்றில் இவ் அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

இதுபற்றி வெகுசன தொடர்புதுறை, உல்லாசப்பயண, விமானத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க கருத்துக்கூறுகையில் புனித பாப்பரசரின் இலங்கை விஜயம் தொடர்பாக அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் அவருக்கு வேண்டிய அனைத்து மரியாதைகளும் வழங்கப்படுமென்றும் தெரிவித்தார்.

# சர்வதேச செஞ்சிலுவை அதிகாரி பலாலி பயணம்

(வடமராட்சி)

பலாலி இராணுவ முகாமில் தடுத்துவைக்கபபட்டுள்ள தமிழ் இளைஞர்களை சந்திக்கும் நோக்குடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் அங்கு சென்றுள்ளார்.

நேற்று மாலை பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட கோமாரி கப்பல் மூலம் சென்ற அவர் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை இராணுவத்தினர் விடுவிக்கும் பட்சத்தில் அழைத்து வருவார் எனத் தெரியவருகிறது. (யோ)

**இரணவில ஒலிபரப்பு நிலையம் தொடர்பாக**

# அமெரிக்க தூதரகம் முன் மதகுருமார் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இரணவில பகுதியில் கட்டப்பட்டு வரும் ''வொய்ஸ் ஒப் அமெரிக்கா'' அஞ்சல் நிலையம் தொடர்பாக இலங்கை அரசும், அமெரிக்காவும் புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய வேண்டுமென்பதை வற்புறுத்தி கொழும்பிலுள்ள அமெ

(6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப் பெண் கைது

(வவுனியா)

வவுனியாவில் வைத்து சிறிலங்கா பொலிசாரால் தமிழ்ப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு செல்வதற்காக வவுனியாவில் தங்கியிருந்த கிளிநொச்சி முழங்காவில் பகுதியை சேர்ந்த உமாபதி சிவன் கலைமதி (23 வயது) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவராவார் இவர் விடுவிக்கப்பட்டமை தொடர்பான தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

# இரத்ததானம் செய்தோரை பாராட்டி சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

மாவீரர்நாள், தேசியத் தலைவரின் பிறந்தநாள் ஆகியவற்றை ஒட்டி இரத்ததானம் செய்தவர்களைப் பாராட்டி நேற்று கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விழா ஒன்று நடைபெற்றது. யாழ் போதனா வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன் இவ்விழா இடம்பெற்றது.

இவ்வாறு இரத்ததானம் செய்தோர் இவ்விழாவில் பலராலும் பாராட்டப்பட்டதுடன் இவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இங்கு யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, நோயாளர் நலன்புரிச் சங்க தலைவர் டாக்டர் சிவபாலன், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் இராமநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

## வரி விளம்பரம்

### தேவை

26'' அல்லது அதற்கு மேற்பட்ட அமைப்பிலுள்ள சொனி / நாஷனல் கலர் ரீ. வீ. தேவை. கீழ்க் கண்ட முகவரிக்கு நேரடியாகவோ தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும். உரிமையாளர், லிபேட்டி சினிமா அச்சுவேலி, (10421)

### தவறிவிட்டது

வேலுப்பிள்ளை நாகேஸ்வரியாகிய எனது உணவு முத்திரை 15.12.94 அன்று சாவகச்சேரிக்கும், மீசாலைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், தயவு செய்து மீசாலை புத்தூர்ச் சந்தியில் உள்ள விக்னேஸ்வராக் களஞ்சியம் அல்லது முருகன் களஞ்சியத்தில் ஒப்படைக்குமாறு வேண்டுகின்றேன். வே. நாகேஸ்வரி மீசாலை வடக்கு (10436)

### மொத்த விற்பனை

கிறிஸ்மஸ்சோடனை, அழகு சாதனப் பொருள்கள், றேடியோ, கைக்கடிகாரம், எவர் சில்வர் பிளாஸ்ரிக்பொருள்கள் பாடசாலை - தையல் உபகரணங்கள், அப்பியாசப் புத்தகங்கள், பொலித்தீன் வகைகளை மொத்த விலையில் பெற்றுக் கொள்ளுங்கள் ஜெயா அழகு மாடம், 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-10902)


### அட்டைகள் மீளப்புதுப்பித்தல்

கமக்காரர் அறிமுக அட்டைகள் மீளப்புதுப்பிக்கும் வேலைகள் தற்போது வட்டரீதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீளப் புதுப்பிக்கப்பட்ட கமக்காரர் அறிமுக அட்டைகளுக்கே விவசாய உள்ளீடுகள் யாவும் விநியோகிக்கப்படும். அதனால் அனைத்து விவசாயிகளும் மார்கழி மாதம் 31-ம் திகதிக்கு முன்னதாக மீளப் புதுப்பித்துக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.

அதிபர்

அலுவலகம்

# யாழ்தேவி ரயிலில் பணத் திருட்டுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

இரண்டு வார இடைவெளியினுள் கொழும்பு - வவுனியா யாழ்தேவி ரயிலில் பிரயாணம் செய்த பிரயாணிகளிடம் இருந்து சுமார் ஒருலட்சத்து எட்டாயிரம் ரூபா அபகரிக்கப்பட்ட நான்கு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

முதல் சம்பவம் கடந்த மூன்றாம் திகதி வியாங்கொடவில் நடைபெற்றது. ரயிலுக்குள் ஏறிய இருவர் தாங்கள் இரகசியப் பொலிசார் எனக் கூறி பிரயாணப்பைகளை சோதனையிட்டனர். ஒருவரின் பிரயாணப்பையில் 38 ஆயிரம் ரூபா இருந்துள்ளது. அதனை எடுத்துக் கொண்டு அவர்கள் தப்பி ஓடி விட்டனர்.

மறுநாள் கோட்டை ரயில் நிலையத்தில் வடபகுதி பிரயாணி ஒருவர் மூன்று நபர்களால் மிரட்டப்பட்டு 54 ஆயிரம் ரூபா பறி கொடுத்தார். இதன் பின் பொல்காவலையில் நடந்த சம்பவத்தில் 11 ஆயிரம் ரூபா வடபகுதி பயணிஒருவரிடமிருந்து அபகரிக்கப்பட்டுள்ளது. மாகோ ரயில் நிலையத்தில் தம்மை பொலிசார் எனக் கூறி ரயிலில் சோதனையிட்ட இரண்டு பேர் ஒரு பிரயாணியிடம் 5000 ரூபாவை அபகரித்து சென்றுள்ளனர்.

கொழும்பு - வவுனியா ரயில் பாதுகாப்பு அதிகாரிகள் கடமையில் இருக்கும் வேளையில் இக் கொள்ளைகள் இடம் பெறுகின்றன.

## உ. கிழங்கு இறக்குமதிக்கு நுவரெலியாவில் எதிர்ப்பு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து உருளைக்கிழங்கு இறக்குமதி செய்ய அரசு எடுத்துள்ள முடிவுக்கு நுவரெலியா விவசாயிகள் தரப்பில் கடும் ஆட்சேபம் எழுந்துள்ளது.

இது தொடர்பாக நுவரெலிய உதவி மேயர் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் நுவரெலியா விவசாயிகளின் பொருளாதாரம் உருளைக் கிழங்கு உற்பத்தியிலேயே தங்கியுள்ளது. இம்மாவட்டத்தில் ஒரு போகத்திற்கு சுமார் 15 ஆயிரம் மெற்றிக் தொன் உருளைக்கிழங்கு விதைக்கப் படுகிறது. வருடத்திற்குசுமார் 50 ஆயிரம் மெற்றிக் தொன் கிழங்கு இம்மாவட்டத்தில் அறுவடை செய்யப்படுகின்றது. ஆனால் இவ்வருட மழையினால் கிழங்கு உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தியாவில் இருந்துஉருளைக்கிழங்குஇறக்குமதிசெய்யவிருக்கும் அரசின் திட்டத்தை எதிர்த்து நுவரெலியா மாவட்டம் முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இந்திய கிழங்கை நிறுத்து;இறக்குமதியை எதிர்க்கிறோம் என அவற்றில் எழுதப்பட்டுள்ளன. சுதந்திர விவசாயிகள் சங்கம் இவற்றை ஒட்டியுள்ளது.

## கண் சிகிச்சை முகாம்கள் சாவகச்சேரியில் தீவிரம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் கண்பார்வை குறைந்தோருக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர், இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்கும் முகமாக நேற்று முன்தினம் 100 பேருக்கு மேல் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து டாக்டர் செல்வி சரவணமுத்துவினால் கண்பார்வை குறைந்தோருக்கு பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டன.

இதேவேளை தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் கண்பார்வை குறைந்தோருக்கு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி லியோ கழகத்தினரும் கண் பரிசோதனை செய்யப்பட்ட 40 பேருக்கு மூக்குக் கண்ணாடியினை எதிர்வரும் 21 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் வழங்கவுள்ளனர்.

மேற்படி, முன்னர் கண்பரிசோதனைகள் மூலம் கண் வெண் விழிப்படல சத்திர சிகிச்சைக்காக தெரிவு செய்யப்பட்டோரில் 4-ம் கட்டமாக 25 பேருக்கு எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி அன்று சாவகச்சேரி மருத்துவ மனையில் மேற்படி சத்திரசிகிச்சை நடைபெறும் என சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் மூக்குக் கண்ணாடி வழங்கும் குழுத்தலைவர் திரு. எஸ். நவரத்தினராசா தெரிவித்தார். (86)

## மருத்துவ வசதி

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் மருத்துவப் பிரிவு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல இடம் பெயர்ந்த அகதி முகாம்களுக்கும் நேரில் சென்று பார்வையிட்டு மருத்துவ வசதியினைத் தற்போது வழங்கிவருகின்றது. (24)


## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம் தனது 1995-ம் ஆண்டிற்கான பொதிகள் ஏற்றுவதற்கான லொறிச் சேவை ரெண்டர் மூலம் கோரப்படுகின்றது விண்ணப்பபத்திரம்பிரதமசங்கத்தில் பெற்றுபூர்த்தி செய்து 28.12.94ம் திகதிக்குமுன்பு பொது முகாமையாளரிடம் சேரல் வேண்டும். கேள்விப் பத்திரம் பெறுவதற்கு ரூபா 150/ - செலுத்தவேண்டும். இப்பணம் மீள் அளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படுபவர் பிணை ரூபா 2500/ - செலுத்தி சங்கத்துடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்,
கொடிகாமம்.

14-12-1994 (சி-10916)


## 16-ம் நாள் நீங்காத நினைவினிலே

## இராமலிங்கம் சரவணமுத்து

எமது பாடசாலை ஆசிரியை திருமதி இந்துமதி அவர்களின் தந்தையார் இராமலிங்கம் சரவணமுத்து அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறையருளை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யாழ்/ நாயன்மார்கட்டு
மகேஸ்வரி வித்தியா சாலை

(10437)


## புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

★ C. I. M. A.
★ I. A. B.
★ BASIC
★ LOTUS
★ SHORT-HAND
★ TYPING

மேலும் விபரங்களுக்கு:


## நினைவு கூருகின்றோம்...

## 19.12.1994

1987-ம் ஆண்டு இதேதினத்தில் ஆவரங்கால் அம்மன் கோவிலடிப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் விழுப்புண்ணடைந்த நிலையில் தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய,

**அருணன்** (வீரச்சாமி அருளம்பலம் தேவதாஸ்-நீர்வேலி மத்தி-யாழ்)

1988-ம் ஆண்டு கொடிகாமம்-கச்சாய்ப்பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய

**அலெக்ஸ்** (சின்னத்துரை குலசேகரம்-கச்சாய்தெற்கு கொடிகாமம்)

1989-ம் ஆண்டு உன்னிச்சைப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பிரசாத்** (அமரசிங்கம் பேரின்பராசா-களுவாஞ்சிக்குடி-மட்டு)

அளவெட்டிப் பகுதியில் தேசவிரோதிகளால் கைது செய்து கொண்டுசெல்லப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான மூவர்,

1990-ம் ஆண்டு கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கேரனா** (ஜெகதீஸ்வரி ஜெகநாதன்- 2-ம் வட்டாரம், குச்சவெளி-திருமலை)

**ஆனந்தி** [கிருஷ்ணலீலா ஐயாத்துரை- கணுக்கேணி, தண்ணீரூற்று-முள்ளியவளை]

**சுகந்தா** [வசந்தமலர் பாலச்சந்திரன் - கோபாலப்பிள்ளை-கொக்காவில்வீதி - துணுக்காய்]

**தேசிகா** [அருள்நாயகி செபஸ்தியாம்பிள்ளை - 98, கோணாவில்-கிளிநொச்சி]

**கப்டன் சுந்தரி** (உதயலட்சுமி உருத்திராபதி - நெடியகாடு - வல்வெட்டித்துறை)

**சஜீவனா** (சாந்தினி கணபதிப்பிள்ளை - ஆலடி ஒழுங்கை மல்லாகம்-யாழ்)

**ஜெனோவா** (றெக்சியா ஜோசி பிலிப்-193/3, கடற்கரைவீதி, பாசையூர்-யாழ்)

**நிரஞ்சனா** (பாக்கியதேவி குஞ்சுத்தம்பி - நாகர் கோயில் கிழக்கு-வடமராட்சி கிழக்கு)

1991-ம் ஆண்டு ஆ.க.வெ. நடவடிக்கையின்போது விழுப்புண்ணடைந்திருந்து சிகிச்சை பெற்று வரும்போது வீரச்சாவெய்திய,

**சுஜே-சுஜி** (பானுமதி பெருமாள் இல:58, கஸ்தூரியார் வீதி, காங்கேசன்துறை-யாழ்)

1993ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த,

**சம்மந்தன்** (சின்னத்துரை சாம்பசிவம்-இலுப்பையடிச்சேனை, கொத்தியாமலை-மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10940)

## அலுவலகம்

(தொல்புரம்)

பொன்னாலை வரதராசப் பெருமாள் மகா வித்தியாலயத்திற்கு அதிபர் அலுவலகம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த வித்தியாலயத்தில் அதிபருக்கான நிரந்தர அலுவலகக் கட்டடம் இன்றியே இதுவரை காணப்பட்டது குறிப்பிடத்தக்கது

ருக்கு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி லியோ கழகத்தினரும் குழுத்தலைவர் திரு. எஸ். நவரத்தினராசா தெரிவித்தார். (86)

## நெற்பயிர்களில் காவோலை புழு தாக்கல்

யாழ் மாவட்டத்தில் தற்போது நெற்பயிரில் பரவி வரும் கவோலைப் புழுவின் தாக்கத்தினால் பெருமளவு நெற்காணிகள் அழியும் நிலையில் உள்ளதாக விவசாயத்தரப்பினர் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இந்நோய் காணப்படவில்லை எனவும், இவ்வருடமே இந்நோயின் தாக்கம் வெகுவாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (5)


## புதிய கல்வியாண்டு வகுப்புக்கள்

**A/L 95 பகல்நேர மீட்டல் வகுப்பு**

**ஆரம்பம்: 19 - 12 - 94 (திங்கள்) மாலை 3.00**

**எமது A/L திறமையான ஆசிரியர் குழு**

| | | |
|---|---|---|
| கணக்கியல் | :- | அருளானந்தம் |
| வர்த்தகம் | :- | கிருஷ்ணா |
| தமிழ் | :- | கணேசலிங்கம் /கமலரூபன் |
| அளவையியல் | :- | சத்தியசீலன் |
| இந்து நாகரிகம் | :- | விஜயகுமார் |
| இந்து சமயம் | :- | பிரபல ஆசிரியர் |
| பொருளியல் | :- | சிறீரங்கநாதன் |

★ ஆண்டு 3 - 11 வரையான வகுப்புக்கள் 5-12-94 முதல் நடைபெறுகின்றன.

குறிப்பு:- எமது நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி கற்கும்ஆற்றலின் வளர்ச்சி பற்றிய பெற்றோர் - ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் 28-12-94 புதன் மாலை 3.00 மணிக்கு நடைபெறும். அனைத்து மாணவர்களின் பெற்றோர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# நெப்ரியூன்ஸ்

கல்வி நிறுவனம்,
நெல்லியடி.

(சி-10941)



மேலும் விபரங்களுக்கு:

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3rd CROSS STREET, JAFFNA.

(சி-10937)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு:
05-05-1927



உதிர்வு:
19-11-1994

அமரர்

### மாணிக்கம் கந்தையா

அன்பைச் சொரிந்து பண்பாக வளர்த்திட்டு
பாசமுடன் ஒரு வார்த்தை கூறாது
விண்ணது சென்று விம்மிடவைத்தீரோ - ஐயா
பிள்ளைகளின் நினைவிலே ஏங்கி தவித்தீர்கள்-ஐயா
முற்றம் தனிலே முகம் காணாநின்றிங்கே
அன்போடு வளர்த்த மக்களும், பேரப்பிள்ளைகளும்
மனைவியும் கலங்கித் தவிக்கின்றனர்.

இன்று (19-12-94)எமது இல்லத்தில் இடம்பெறும் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மனைவி,மக்கள், மருமக்கள்
க. இராஜன் (BAR)

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(10438)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு
11- 09- 1935

அநியாய அழிப்பு
30- 12- 1993



### இராமலிங்கம் ஆறுமுகப்பத்தர்

திதி: 19- 12- 94

அன்பின் திரு உருவமே ஐயா
அரக்கனின் அராஜகத்தால் வந்ததே வல் விதி
சென்று வாறேன் என்று நீங்கள் சென்ற வழி பார்த்து
சோர்ந்துபோகும் வேளையிலே சேதி ஒன்று வந்ததையா
சத்தியமாய் நாங்கள் நம்பவில்லை- தங்கள்
செவ்வுடலில் காயமென்றே நாமிருந்தோம்
பாதகனின் குண்டு உம்முடலைத் துளைத்து
பாதிவழி சென்று விட்டீர் எமைப் பிரிந்து
ஆண்டொன்று போனாலும் ஆறாதையா எம் உள்ளம்

உங்களது இலட்சியங்கள் நிறைவேறவும்
ஆத்மா சாந்தியடையவும் கண்ணீர்ப்
பூக்கள் கொண்டு பிரார்த்திக்கின்றோம்,

உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மற்றும்
உற்றார், உறவினர்.

இத்தியடிப் பிள்ளையார்
கோவிலடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(10435)

கலன் தோட்ட பிரச்சினை

## அரசுக்கு காலக்கெடு அன்றேல் வேலை நிறுத்தம்

### அமைச்சர் தொண்டமான் எச்சரிப்பு

(கொழும்பு)

பதுளை கலன் தோட்டப் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினை உடன் தீர்க்கப்பட வேண்டும் என்று அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவ் வருட இறுதிக்குள் இப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் ஊவா மாகாணத்தில் உள்ள அனைத்து தோட்டங்களிலும் வேலை நிறுத்தம் செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கலன் தோட்டத்தில் 99 வருடகால குத்தகை முடிவடைந்துள்ளது. தற்போது நிர்வாகம் கைமாறும் நிலையில் உள்ளது. புதிய சூழ்நிலையில் தொழிலாளர்கள் தமது எதிர்காலம் குறித்து அச்சம் கொண்டவர்களாக வேலைக்குச் செல்லாமல் இருக்கின்றனர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## குழந்தையை விற்றதாய் மீளப் பெற மறுப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளின் ஆதரவுடன் இலங்கையில் நடத்தப்படுவதாக கூறப்படும் குழந்தை வியாபாரம்தொடர்பாக கொம்பனிவீதி பொலிசாரினால் கைதான இரு பெண்களும் தாம் விற்ற குழந்தைகளை மீள ஏற்க மறுத்துவிட்டனர்.

இரு குழந்தைகளையும் தாம் வளர்க்க முடியாத நிலையிலேயே அவற்றை விற்றதாக கூறினர். குழந்தைகள் தற்போது பாணந்துறை குழந்தைகள் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதே சமயம் பெண்வைத்தியர் உட்பட மேலும் இரண்டு நபர்கள் இணைந்து நடத்திச் சென்ற இந்த குழந்தைவியாபாரம் தொடர்பான விசாரணையை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலஞ்சம் கேட்டாராம்; பெண் அதிகாரி கைது

(கொழும்பு)

வருமானவரி செலுத்தாத வழக்கொன்றில் வழக்கை கைவிட இலஞ்சம் பெற்றதாக கூறப்படும் கொழும்பிலுள்ள இறைவரி திணைக்கள தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த பெண் அதிகாரி ஒருவர் இலஞ்ச திணைக்கள அதிகாரிகளால்கைதாகியுள்ளார்.

வருமானவரி செலுத்தாதிருந்த கண்டி அரச ஒப்பந்தக்காரர் ஒருவரின் வழக்கை கைவிட்டு விட இப்பெண் அதிகாரி 10 ஆயிரம் ரூபா இலஞ்சம் கேட்டிருந்தார். இது தொடர்பாக இப் பெண் அதிகாரியும் அவருக்கு உடந்தையாக செயற்பட்ட அவரின் கார் சாரதியும் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## புலிகளுடன் விரைவில் பேச அரசாங்கம் விரும்புகிறது

### - ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதானப்பேச்சுக்களை இயலுமான வரையில், விரைவில் மேற்கொள்ளவே அரசாங்கம் விரும்புகிறது. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

இவ்வாரஆரம்பத்தில் அலரி மாளிகையில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில்அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தாக்குதல் நிறுத்தம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் பதிலை தான் வரவேற்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கிராம ஆய்வுகள் மூலமே கிராமங்களின் சுபீட்சம் அதிகரிக்கும்

ஒரு நாட்டின் முன்னேற்றம் கிராமங்களிலேயே தங்கியுள்ளது. கிராமங்களில் செறிந்தும் அதேநேரம் மறைந்தும் காணப்படும் பல்வகை வளங்கள் ஒரு தேசத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் துணைபோகின்றன. இவ்வாறான சிறப்பான பலவிடயங்கள் கிராமங்களில் காணப்பட்டாலும், கிராமங்களின் அக்கறையின்மையாலும், முயற்சியின்மையாலும் அதிகாரப் போக்குடையவர் சிலரின் விரும்பத்தகாத தலையீடுகள் காரணமாகவும் கிராமங்களில் காணப்படும் வலுக்கள், வளங்கள், பிரச்சினைகள் போன்றவற்றின் உண்மைத் தன்மைகள் பின்தங்கிய அல்லது பிற்படுத்தப்பட்ட சில கிராமங்களில் அவற்றுக்கான காரண காரிய விளக்கங்கள் என்பன வெளிப்படுத்தப்படுவதில்லை. இந்நிலை நீடிக்குமானால் பின்தங்கிய நிலையிலுள்ள பிரதேசங்கள் வளர்ச்சிப் பாதையிலிருந்து மேலும் மேலும் விலகுவதுடன் மக்களையும் எதிலும் அக்கறையில்லாதவர்களாக்கிவிடும்.

இந்த வகையில் தமிழீழத்தில் சகல பிரதேசங்களும் மேம்பாடடைய வேண்டும். ஏற்றத் தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும். சகல மக்களும் உயர்வு தாழ்வு இல்லாத சமுதாயமாக, சமத்துவமாக மதிக்கப்படல் வேண்டும். சகல வளங்களும் சகலரையும் சென்றடைய வேண்டும். சகல மக்களும் சுபீட்சமான ஒருஎதிர்கால வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். அனைவருடைய பங்களிப்புடனும் எமது போராட்டமானதுவெற்றியை நோக்கி நகர்த்தப்படவேண்டும் என்பதே அனைவரதும் இலட்சியமாகும்.

சில கிராமங்கள் மூடப்பழக்க வழக்கங்கள் காரணமாக சமுதாய ஓட்டத்தில் ஓடாது ''எதுநடந்தாலும் எமக்கென்ன'' என்று வாய் பேசாது மௌனியாகி விடுகின்றது. இக்கிராம மக்கள் இந்த மூடக் கொள்கைகளில் ஊறிப்போய் கல்வி அறிவு, சமூக அறிவு எதுவும் இல்லாது முன்னேற்றத்தில்பின்னடைவு பெற்று வருகின்றனர். இந்நிலையைத் தடுத்து வளர்ச்சி குன்றிய கிராமங்களையும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்காக தமிழீழப் பகுதிகள் எங்கும் கிராமியப் பாசறைகள் அவ்வப்பகுதி அரசியல் துறையினரால் நடாத்தப்பட்டு வருகின்றன இதற்குத் தேவையான. சகல விபரங்களும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளிவிபரக் கிளையினரால் திரட்டப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 1992-ம் ஆண்டில் யாழ். மாவட்டத்தில் கோப்பாய் கொலனிக் கிராமப் பகுதியும், 1993-ம் ஆண்டில் யாழ். மாவட்டத்தில் இராஜ, சண்டில், மத்தொனிக் கிராமப்பகுதிகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மானுருவிக் கிராமப் பகுதியும, வவுனியா கோட்டத்தில் 10 ஏக்கர் திட்டக் கிராமப் பகுதியும், 1994 ம் ஆண்டில் யாழ் மாவட்டத்தில் கைதடி, நாவற்குளி தெற்கு, மறவன்புலவு, புத்தூர்மேற்கு, சிறுப்பிட்டி மேற்குக் கிராமப் பகுதிகளும், கிளிநொச்சிக் கோட்டம், விவேகானந்த நகர், உதய நகர் கிழக்கு, பாரதிபுரம் கிழக்குக் கிராமப் பகுதிகள் அடங்கிய 12 கிராம ஆய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

கிராமிய பாசறைகளில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் புள்ளிவிபரக் கிளையின் புள்ளிவிபரங்கள் ஆராயப்படுவது மட்டுமல்லாமல் நிறுவனத்தோடு தொடர்புடைய பணிகளை இயலுமானவரை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம்நிறைவு செய்து வருகின்றது.

ஒரு கிராமத்தில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடியவெளிநாட்டு,உள்நாட்டு உதவித் திட்டங்களை மேற்கொள்வதற்கோ அன்றி சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடிய பொது ஸ்தாபனங்களை நிறுவுவதற்கோ அல்லது அங்கு காணப்படும் சமுதாய அடக்குமுறைச் சீர்கேடுகளை (சாதி, மதம், பெண்ணடிமை, சீதனம் போன்றவை) களைவதற்கோ அந்தக் கிராமத்தைப் பற்றிய அனைத்து விபரங்களும் துருவி ஆராயப்படுதல் அவசியமாகும்.

இவ்வாறு ஆய்வு செய்து தயாரிக்கப்படும் குறிப்பிட்ட கிராமம் அல்லது பிரதேசம் பற்றிய ஆய்வறிக்கைகளில் குடித்தொகை (வயது, பால், மதரீதியாக) பாதிப்புற்றோர் இடம்பெயர்ந்தோர், பிற இடங்களில் வசிப்போர், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர், போஷாக்கற்ற சிறுவர்கள், விதவைகள் போன்ற குடியியல் விபரங்களும், கல்வி நிலை, பொருளாதாரநிலை, அரசியல் நிலை, மக்களின் மனோநிலை போன்ற சமூக நிலைபரங்களும், தொழிலாளர் விபரம், தொழினுட்பவியலாலர் விபரம், அரச ஊழியர் விபரம், பயனுள்ள மரங்கள் பற்றிய விபரம், கால்நடைகள், வளர்ப்புப் பறவைகள் விபரம், விவசாய உபகரணங்களைப் பற்றிய விபரம் போன்ற வளங்களின் விபரங்கள் என்பன புள்ளி விபரங்களாக அமைந்து காணப்படும். இவ்வாறாக இன்னோரன்ன பல விடயங்கள் கிராம ஆய்விற்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளி விபரக் கிளையினால் அலசி ஆராயப்படுகின்றன.

இவ்வாறான ஆய்வுகளின் மூலமும் அதனூடாகத் தயாரிக்கப்படும் அறிக்கைகளின் மூலமுமாகவே பின்தங்கிய அல்லது பிற்படுத்தப்பட்ட கிராமங்களில் அவற்றை முன்னேற்றும் வழிவகைகள், அக்கிராமத்தின் தேவை என்ன என்பவை இனம் காணப்படுகின்றன. ஒரு கிராமம் அல்லது ஒரு பிரதேசத்தைப் பற்றி மேலெழுந்த வாரியாக நோக்கி நிறைவேற்றப்படும் திட்டங்கள்யாவும் ''விழலுக்கிறைத்த நீர்'' போலவே ஆகும். பலதரப்பட்ட தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுத்துத் தொகுத்து ஆராயப்பட்டு பெற்ற அனுமானங்களின் மூலம் எடுக்கப்படும் முடிவுகளை அல்லது தீர்மானங்களை அமுல்படுத்தும்போதே சரியான பலனை அடைய முடியும்.

எனவே இவ்வாறான கிராம ஆய்வுகளினாலும், கிராமியப் பாசறைகளின் மூலமாகவும் பழமையில் ஊறிய, நவீன உலகை தரிசிக்காத மக்களுக்கு வெளிச்சப் பாதையைக் காட்டவும், தற்கால சூழலோடு ஒத்திசைவாக வாழவும், மக்களின் குறைகள் தேவைகளைக் கண்டறியவும் அதற்குத் தடையாகவுள்ளவற்றை அகற்றவும் முடியும்.

- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

## கொமாண்டோ சீருடையில் வைர வியாபாரி வீடு திருட்டு

(கொழும்பு)

இராணுவ கொமாண்டோ சீருடையில் ஆயுதங்கள் தரித்த கோஷ்டியொன்றால் ஒக்கம்பிட்டிய பகுதியிலுள்ள பிரபல இரத்தின வியாபாரி ஒருவரின் வீடு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இக்கொள்ளைக் கோஷ்டியினர் தானியங்கி ஆயுதங்களையும் வெடிகுண்டுகளையும் வைத்திருந்ததாகவும், படைகளிலிருந்து விலகியோர் இக்கொள்ளையை நடத்தியிருக்கலாம் அல்லது நெருங்கிய சம்பந்தம் கொண்டிருக்கலாமெனவும் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## போதைப்பொருள்வழக்கில் மூவருக்கு மரணதண்டனை

(கொழும்பு)

ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்ததாக கொழும்பைச் சேர்ந்த மூவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சுப்பிரமணியம் சண்முகவேல், பத்மநாதன் அண்ண, தேவமுனிகேசுனில் ஆகிய மூவரே மரண தண்டனை பெற்றவர்களாவர். 1993 செப்டம்பர் 20ஆம் திகதி முகத்துவாரம்பகுதியில் 2505 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்ததாகவே இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

முதல் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவிக்கையில், தம்மீதான குற்றச்சாட்டை மறுத்து எதிரி வாதாடி இருந்தார். எனினும் நீதிபதியின் தீர்ப்பிற்கு கருணைகோருகிறார். 33வயதுடைய அவருக்கு மூன்றுபிள்ளைகள் உள்ளனர் என்றார். 2ஆம் எதிரிசார்பில் வாதிட்ட சட்டதரணிதனது கட்சிக்காரருக்கு 31 வயது என்றும் ஒரு பிள்ளை இருப்பதாகவும் கூறினார். மூன்றாம் எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி தம் கட்சிகாரருக்கு 45 வயது என்றும் மூன்று பிள்ளைகள் இருப்பதாகவும் முன்னைய குற்றம் ஏதும் இல்லை என்றார்.

மூன்றாம் எதிரிக்கு ஏற்கனவே 7 குற்றங்கள் இருப்பதாக நீதிமன்றம் சுட்டிக்காட்டிய போது எதிரி அதை ஏற்றார். சட்டத்தரணி தனது கூறறை மீளப்பெற்றார்

எதுவும் கூற விரும்புகின்றீர்களா என எதிரிகளை கேட்டபோது முதல் இரு எதிரிகளும் எதுவும் கூறவில்லை. மூன்றாம் எதிரியோ தமக்கு இதில் சம்பந்தம் இல்லை. போதைப் பொருளை யார் கொண்டுவந்தது,வைத்திருந்தது என்பது தமக்கு தெரியாது என்றும் தூங்கிக் கொண்டிருந்த தம்மை பொலிசார் கைது செய்ததாகவும் கூறினார். தீர்ப்பை எதிர்த்து தாம்மேன்முறையீடு செய்யப் போவதாக எதிரிகளின் சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர்.

## 6-ம் ஆண்டில்

### ஈ ழ நா த ம்

## போட்டிகளும் விதிமுறைகளும்

ஈழநாதம் மக்கள் தினசரி ஆறாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதைமுன்னிட்டு சிறுகதைப் போட்டி கவிதைப் போட்டி என்பவற்றை நடாத்தவுள்ளது இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளை பிரதிபலிக்

தெரிவித்துள்ளார்.

இவ்வாரஆரம்பத்தில் அலரி

கவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்காக தமிழீழப் பகுதிகள் எங்கும் கிராமியப்

குடித்தொகை (வயது, பால், மதரீதியாக) பாதிப்புற்றோர் இடம்பெயர்ந்தோர், பிற

யும்.

- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

---

ஹோட்டல் உரிமையாளர் சங்கம்

## தஞ்சாவூர் மாநாட்டை புறக்கணிக்க முடிவு

(சென்னை)

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் தமிழ்நாடு தஞ்சாவூர் மாநகரில் நடைபெறவுள்ள அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைப் புறக்கணிப்பு செய்வது என்று தமிழ்நாடு ஹோட்டல் உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சமீபத்தில் நடத்திய மூன்று நாள் போராட்டம் அரசின் கவனத்தை ஈர்க்காததைத்தொடர்ந்து மாநாட்டை புறக்கணிப்பு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## ஆளுனர் ரெட்டியை மீளப் பெறுங்கள்

### மத்திய அரசிடம் ஜெயலலிதா

(சென்னை)

தமிழகத்திற்கு புதிய ஆளுனர் ஒருவரை நியமிக்குமாறு முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அரசிடம் கோரியுள்ளார். அண்மையில் டில்லியில் ஆளுனர் சென்னா ரெட்டி நிருபர்களிடையே கூறிய சில கருத்துக்களை ஆட்சேபித்துள்ள ஜெயலலிதா சென்னா ரெட்டியை உடனடியாக திரும்பப்பெறுமாறு மத்திய அரசைக் கோரியுள்ள்ளார்.

இவரின் இடத்திற்கு புதியவரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறும் திட்டமிட்டு ஆளுனர் தம்மீது அவதூறு பரப்புவதாகவும் முதலமைச் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## நமீபியா தேர்தல் ஆளும் கட்சிவெற்றி

(வின்ஹோக்)

நமீபியாவின் ஆளும் ஸ்வபோகட்சி சுதந்திரத்திற்கு பின் நடைபெற்ற முதலாவது தேர்தலில் அதிகபெரும்பான்மையுடன் வெற்றிபெற்றுள்ளது.

ஜனாதிபதி சேம்னி ஜேமாவின் ஸ்வபோகட்சி பாராளுமன்றத்தில் 72 இடங்களை பெற்றுள்ளது. இதுமுன்னைய ஆசனங்களை விட 11அதிகப்படியானதாகும். பிரதான எதிர்க்கட்சியான டேர்ன் ஹாலே கூட்டணி 15 ஸ்தானங்கள் மட்டுமே பெற்றது இது முன்பைவிட 6 இடங்கள் குறைவு.

தென்னாபிரிக்காவிற்கு எதிரான 23 ஆண்டுகால கெரில்லா யுத்தத்திற்கு தலைமை வகித்தவர் நிஜோமா ஆவார் 15 லட்சம் பேரைக் கொண்ட நமீபியா 1990 இல் சுதந்திரம் பெற்றது.

## ரஷ்யப்படையினர் தினமும் அச்சத்தினால் இறப்பர்

### செசன்யா தலைவர் அறிவிப்பு

(மாஸ்கோ)

ரஷ்யர்கள் அச்சத்தினால் மடியும் வரை கெரில்லா யுத்தத்தை எதிர்நோக்க நேரிடும் எம்பலம் குறைவாக இருப்பினும் வடகாகஸஸ் பிராந்திய மலைப்பகுதியில் கெரில்லா நடவடிக்கைக்கு நாம் தயாராகி வருகின்றோம் என ரஷ்யாவிலிருந்து பிரிந்து தன்னை ஓர் தனிநாடாக அறிவித்துள்ள செசன்யாவின் தலைவர் குடயேவ் தெரிவித்துள்ளார்.

இச்சிறிய நாட்டினுள் ரஷ்ய துருப்புகள் புகுந்துள்ள தற்போதையநிலையில் குடயேவ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். பின்புறத்திலிருந்து ரஷ்யர்களை நாங்கள் தாக்கி பலத்த அடி கொடுக்க வேண்டும். மலைவாசிகளின் நூற்றாண்டு கால தந்திரம் இதுவே தாக்குதல் பின் வாபஸ் என்ற உத்தி மூலம் ரஷ்யர்களை களைப்படையச் செய்து பயத்தினால் சாகச் செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை செசன்யாவிற்கு துருப்புகளை அனுப்ப ஜனாதிபதி யெல்சின் மேற்கொண்ட முடிவுக்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கிறிஸ்தோபர் அனுதாபம் தெரிவித்துள்ளதுடன் வேறு வழி எதுவும் இன்றியே இந்த நடவடிக்கையை யெல்சின் மேற்கொண்டார் என்பதுநிச்சயம் எனக்கூறியுள்ளார்.

---

### கார்ட்டர் பொஸ்னியாவுக்கு

பொஸ்னியபோருக்கு சமரசம் காணும்முயற்சியில் இன்று சரஜேவோ செல்ல அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் முடிவு செய்துள்ளார். இவர் டொஸ்னிய சேர்பிய தலைவரை சந்திப்பார். கார்ட்டரை இவரே அழைத்திருந்தார்.

### பேச்சுகளுக்கு இணக்கம்

செஸ்னியர்கள் ஆயுதங்களை கைவிட ரஷ்யா விடுத்த கால அவகாசம் நேற்றுடன் முடிவடைந்தது. எனினும் ரஷ்யா இன்னமும் செஸ்னியா மீதான தாக்குதல் எதுவும் மேற்கொள்ளவில்லை அதே சமயம் ரஷ்யாவுடன் சமரசம் பேச செஸ்னிய தலைவர் முன்வந்துள்ளார்.

## பனிச்சரிவில் சிக்கி 12 இந்திய ராணுவம் பலி

(டில்லி)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் ஏற்பட்ட பனிச்சரிவொன்றில் 12 இந்திய இராணுவ வீரர்கள் பலியாகி உள்ளனர்.

காணாமற்போனவர்கள் மற்றும் பனிச்சரிவில் சிக்கியவர்களின் மொத்தத் தொகை கக் முப்பதிற்கும் அதிகமாக இருக்கும் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஆயிரம் அமெ. படைகள் பனாமா விரைவு

(பனாமா)

பனாமா நாட்டிற்கு ஆயிரம் அமெரிக்கத் துருப்புகள் வந்துள்ளன. இங்குள்ள கியூப அகதிகள் முகாம் பாதுகாப்பிற்கெனவே அமெரிக்கா இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இங்கு கியூப அகதிகள் செய்த கலகத்தினால் 221 அமெரிக்கப் படையினர் காயமடைந்தனர். பனாமாவில் உள்ள கியூப அகதிமுகாம்களில் ஏற்கனவே 2000 அமெரிக்கப்படையினர் பணியில் உள்ளனர்.

---

ஈழநாதம் மக்கள் தினசரி ஆறாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதைமுன்னிட்டு சிறுகதைப் போட்டி கவிதைப் போட்டி என்பவற்றை நடாத்தவுள்ளது இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளை பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

★ சிறுகதை ★ கவிதை

### போட்டிகளில் கலந்து கொள்வோர் கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளையோ சமூகப் பிரச்சினைகளையோ சித்திரிக்கும் வண்ணம் அமையலாம்.

★ படைப்புகள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதைஉறுதிப்படுத்த வேண்டும்.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் ஜனவரி 31 ம் திகதிக்குப் பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

போட்டி முடிவுகள் யாவும் 17 02. 1995 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

இப்போட்டிகளில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் ஆறாம் ஆண்டின் ஆரம்ப விழா மலரில் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானவை எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்கள் ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு ஆறாம் ஆண்டின் ஆரம்ப நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம் ஆறாம் ஆண்டுப் போட்டி' என கடித உறையில் இடது பக்கமேல் மூலையில் குறிப்பிடப்பட்டு,

**ஆசிரியர்,**
**ஈழநாதம்**
**31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

# புறநிலைப் படிப்புகள் அலகு புதியநெறிகள் ஆரம்பிக்கும்

(திருநெல்வேலி)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு பல புதிய கற்கைநெறிகளை ஆரம்பிக்கவுள்ளதாக புறநிலைப் படிப்புகள் அலகு இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தொழில்துறைப் பொறியியல் பிரயோகங்கள், தொடர்பியல், ஊர்திப் பொறியியல், உலோகவியல், நில அளவையியல், நாட்டுப்புறவியல், உளவியல், வளங்களும்பேணுதலும், புனர்வாழ்வு புனர்நிர்மாணத்துறை முறைகள், வார்ப்புக்கலை போன்ற பயிற்சி நெறிகள் 1995 ஜனவரி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கற்கை நெறிக்கான விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும். 18 வயதிற்கு மேற்பட்ட எவரும் இக்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்,

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சுயமுகவரியிட்ட கடித உறையுடன் யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகுடன் தொடர்பு கொள்ளவும்.

மேலும் புறநிலைப் படிப்புகள் அலகின் கீழ் டிப்ளோமா கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் தான் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (27)

## நல்லின புல் அபிவிருத்தி

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிறந்த ரக புல் மற்றும் அவரை இன விதைகள் தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால்பரீட்சார்த்தமாககால்நடை தீவனத்திற்காக உற்பத்தி செய்யப்படவுள்ளது.

சிறந்த முறையில் உற்பத்தி செய்து மீளவும் விதைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கக் கூடிய விவசாயிகளுக்கு இவ் விதையினங்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

எனவே இவ்விதை இனங்கள் தேவைப்படும் விவசாயிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ் மாவட்டச் செயலகத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் தெரிவிக்கின்றது.

# அரசினர் வைத்தியசாலை மருந்துகள் கிடைத்தன

(தொல்புரம்)

வலிமேற்கு, வலிதென்மேற்குப் பகுதிகளின் அரசினர் வைத்தியசாலைகளுக்கு நடப்பு வருட கடைசி கந்தாயத்திற்கான மருந்து வகைகள் சுகாதாரப் பகுதியினரால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சங்கானை அரசினர் வைத்தியசாலை, தொல்புரம் பாணாவெட்டி மருந்துச்சாலை, வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை, மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை, வட்டு சித்தன்கேணியில் இயங்கிவரும் பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை, போன்றவற்றிற்கு மருந்து வகைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதேவேளை மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலைக்கும் மேற்படி மருந்து வகைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அறியவருகிறது. (41)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

தமிழீழ மண்ணில்

03-09-1970



# சமஷ்டி பிரிவினைக்கு வழிவகுக்கும் சிறிலங்காவின் கூற்று நகைப்புக்குரியது

(கொழும்பு)

சமஷ்டி அமைப்பு என்பது பிரிவினைப் போக்கிற்கு இடமளிக்கும் என சிறிலங்கா அரசியல் கட்சிகள் கூறுவது நகைப்புக்கு இடமானது. இவ்வாறு ஜேர்மனியைச் சேர்ந்த கிரேட்டர் கொன்ரக் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கருத்தரங்கொன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கும் போது சமஷ்டி அமைப்பை சிங்கள அரசியல் கட்சிகள் வலுவாக எதிர்க்கின்றன. இவ்வாறு எதிர்ப்பு தெரிவிப்பது நகைப்புக்கிடமானது எனவும் தெரிவித்துள்ளார்.

## பனைவிதை நடுகை

சங்கானை மேற்கு, செட்டிகுறிச்சியைச் சேர்ந்த செ.புவி என்பவர் கற்பகச்சோலை பனை நடுகைத் திட்டத்தின் கீழ் 200 பனை விதைகளை தனது சொந்தக் காணியில் நாட்டியுள்ளார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் மேற்கொள்ளப்பட்டு வரும் கற்பகச்சோலை பனை நடுகைத் திட்டத்தின் எதிர்காலப் பயன்பாடுகளை உணர்ந்த இந்த இளைஞர் மேற்படி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்று இம் முயற்சியில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்டெடுப்பு

இலுப்பையடி சந்திக்கருகில் கண்ணாடி கூடு ஒன்று சிறு தொகை பணத்துடன் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் எமது அலுவலகத்தில் அடையாளம் காட்டி பெறவும்.

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடைப்பகுதியில் சுப்பிரமணியம் வாசிகசாலையில் இயங்கி வந்த தெல்லிப்பளை வைத்தியசாலையின் சில பிரிவுகள் இடம் மாற்றப்பட்டுள்ளன.

இது தற்பொழுது கந்தரோடை பகுதியில் அமைந்துள்ள தமிழ்க் கலவன் வித்தியாலயத்திற்கு அருகில் இயங்கி வருகிறது.

குழந்தை வைத்தியம் பொது வைத்தியம், சலரோகம் ஆகியவற்றின் பிரிவுகளே மாற்றப்பட்ட இடத்தில் இயங்கி வருகிறது. இவ் வைத்தியசாலையில் தளபாட பற்றாக் குறை நிலவுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வைத்திய சாலையில் மாதாந்தம் 12 கிளினிக் நடை

# கடலக வள ஆய்வு நெறி பயிற்சி பூர்த்தியானது

கடலகவள கல்வி நிறைவு விழா யாழ்ப்பாண மத்திய கல்லூரி மண்டபத்தில் கடந்த 03-ம் திகதி காலை 9.00 மணியளவில் நடைபெற்றது.

க. பொ, த [சா. த] பரீட்சையில், கடல்வள பாடத்தில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக, இக் கல்விப் பயிற்சி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் யாழ்ப்பாண பிரதேச செயலருடன் இணைந்து கடந்த மூன்று மாதங்களாக சனி, ஞாயிறு கிழமைகளில் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டு வந்தது.

விழாவை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களும், கலாநிதி கா. சித்திரவடிவேல் அவர்களும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்கள்.

யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. நந்தகுமாரன் புவியியல் துறையைச் சேர்ந்த திரு. சூசை ஆனந்தன், கூட்டுறவு ஆணையாளர் திரு. பஞ்சலிங்கம், திரு. முருகையா உட்பட பல அரச, அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனபிரதிநிதிகளும்கலந்து கொண்டு உரையாற்றி சிறப்பித்தனர். இப்பயிற்சியில் 32 மாணவர்கள் பயிற்சி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அடுத்த ஆண்டில் 190 நாட்கள் பாடசாலை

(கொழும்பு)

1995இல் பாடசாலைகளை குறைந்தபட்சம் 190 நாட்களுக்கு நடத்தும்படி சகல பாடசாலைகளுக்கும் கல்வி அமைச்சினால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

ஜனவரி 2-ம் திகதி ஆரம்பமாகும் பாடசாலைகள் முதலாம் தவணைக்காக ஏப்ரல் 7ஆம் திகதி மூடப்படும்.

மே மாதம் 2 ஆம் திகதி முதல் ஜூலை 28 ஆம் திகதி வரை இரண்டாம் தவணை நடைபெறும். ஆகஸ்ட் 28 முதல் டிசம்பர் முதலாம்திகதி வரை மூன்றாம் தவணைப் பாடசாலைகள்நடைபெறும்.


## ஏல விற்பனை

### வெற்றுப் பலகைப் பெட்டிகள்,

கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.

எமது திணைக்களத்தில் பாவனைக்குகந்த வெற்றுப் பலகைப் பெட்டிகள் ஒரு தொகை 1994-12-23-ம் திகதி காலை 10.00 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன. எனவே அவற்றினை ஏலத்தில் பெற்றுக்கொள்ள விரும்புவோர் அன்றையதினம்காலை 10.00 மணிக்கு கல்வித் திணைக்கள களஞ்சியக் கிளையில் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள். மேற்படி பெட்டிகளைப் பார்வையிட விரும்புவோர் அன்றைய தினம் காலை 9.00 மணிக்குக் களஞ்சியக் கிளையில் பார்வையிடலாம். ஏலத்தில் வெற்றி கொள்வோர், உடனடியாகப் பணத்தினை கணக்காளரிடம் செலுத்துவதுடன் அன்றைய தினமே அவற்றினைப் பொறுப்பேற்று அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.



## A/L 95

# கணித - உயிரியல் பிரிவு

பகல் முழுநேர - மாலை நேர

மீட்டல் வகுப்புகள்

## ஆரம்பம்: 23-12-94

| | | |
|---|---|---|
| இரசாயனவியல் | : | திரு. செல்வா |
| பௌதிகவியல் | : | திரு. ஞானி |
| | | திரு. வர்ணம் |
| | | திரு. ரவீந்திரநாதன் |
| தூய/பிரயோக | ( | திரு. குணம் |
| கணிதம் | ( | திரு. கிருஷ்ணா |
| தாவரவியல் | : | திரு. ஐங்கரநேசன் |
| விலங்கியல் | : | திரு. கெங்காதரன் |

- முழுப்பாடத்திட்டமும் பூர்த்தி செய்யப்படும்
- பாடசாலை செல்லாதவர்கள் மாத்திரமே பகல் முழுநேர வகுப்புகளில் கலந்து கொள்ளலாம்.
- 22-12-94 அன்று மாத்திரமே அனுமதி வழங்கப்படும்.
- நேரசூசிகையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
- 94இல் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(சி-10935)



தமிழீழ நிர்வாகசேவை

## வேலைப்பகுதி

# வேலை வாய்ப்புக்கள்


வேலைப்பகுதி, வேலைத்தளத்தில் பின்வரும் பணிநிலைகளில் கடமையாற்ற விரும்பும் 40 வயதுக்குட்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 1994. 12. 21 புதன் கிழமை தொடக்கம் 1994. 12. 23 வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. தகுதியானவர்கள் நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

தமிழீழ மண்ணில்

03-09-1970

தமிழ்த் துரோகியர் சதியில்

19-12-1989



## நாகராஜா சூரியபாலன்

திதி:26.12.94

ஈண்டு எமக்கொரு தாயகம் நிச்சயம்
வேண்டுமென்றே நீயும் உயிர் விடுத்தாய்
ஆண்டுகள் ஐந்து ஓடி மறையினும்
அடிக்கடி உன்தன் நினைவு வரும்
மாண்டவர் மீண்டு வரரார் என்பதால் நெஞ்சம்
மறந்திடுமா உள்ளம் உறங்கிடுமா

'வாழ்க'
மட்டுவில் தெற்கு
சாவகச்சேரி.

நாகராஜா குடும்பத்தினர்

(10429)

---

## 4-ம் ஆண்டு நினைவில்...

அன்னை மடியில்

24. 03. 1974



மண்ணின் மடியில்

19. 12. 1990

### வீரவேங்கை ஆனந்தி
### (கிருஷ்ணலீலா ஐயாத்துரை)

வானமே போர்மேகம் புடை சூழ - வீர
கானமே பார் எங்கும் முரசொலிக்க
மானமே பெரிதெனப் புறப்பட்ட ஆனந்தியே - உன்
கானமே எம் மனதில் பாடிடும் தேவியே.

203, பலாலி றோட்,
கந்தர்மடம்.

-சகோதரர்கள்

(சி-10932)

---

மாற்றப்பட்ட இடத்தில் இயங்கி வருகிறது. இவ் வைத்திய சாலையில் தளபாட பற்றாக் குறை நிலவுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வைத்திய சாலையில் மாதாந்தம் 12 கிளினிக் நடைபெற்று வருகிறது. இதில் மாதாந்தம் 2000ற்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ)

---

மேற்படி பெட்டிகளைப் பார்வையிட விரும்புவோர் அன்றைய தினம் காலை 9.00 மணிக்குக் களஞ்சியக் கிளையில் பார்வையிடலாம். ஏலத்தில் வெற்றி கொள்வோர், உடனடியாகப் பணத்தினை கணக்காளரிடம் செலுத்துவதுடன் அன்றைய தினமே அவற்றினைப் பொறுப்பேற்று அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.

யாழ் கல்விப்பணிப்பாளர்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
16-12-1994

(சி-10936)

---

உள்ளத்தில் ஒளிவீசும் உத்தமர்க்கு

## அஞ்சலிகள்

31-ம் நாள் நினைவு — 280-ம் நாள் நினைவு



திரு. மு. கிருஸ்ணபிள்ளை அவர்கள்

மண்ணில்: 1943 - 04 - 28
விண்ணில்: 1994 - 11 - 19



திருமதி கமலாதேவி கிருஸ்ணபிள்ளை அவர்கள்

இம்பர்: 1950 -09 - 06
உம்பர்: 1994 -03 - 14

அம்மா முன்போன அவலம் நீங்கவில்லை
அப்பா நீங்களுமா போனீர்கள்?
இம்மா நிலத்திலினி எமக்கென்று யாருண்டு
இடருற் றேங்குகிறோம் மக்கள் நாம்.

★ ★ ★ ★

வானடைந்த தெய்வங்காள்,
வாழ்த்திசைத்தோம் சாந்தியுற,
எம்மனதில் உங்கள் நினைவிருக்கும்
என்றென்று மும்பாசம் மனதிருக்கும்,

தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

பிள்ளைகள்,
உறவினர்கள்

(10369)

---

வேலைப்பகுதி, வேலைத்தளத்தில் பின்வரும் பணி நிலைகளில் கடமையாற்ற விரும்பும் 40 வயதுக்குட்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 1994. 12.21 புதன் கிழமை தொடக்கம் 1994. 12. 23 வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. தகுதியானவர்கள் நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். நேரம் : மு. ப. 9. 00 மணியிலிருந்து 12 மணி வரை.

**1. இயந்திரவியல்முகாரி (Mechanical Foremen)**

(அ) தேசிய தொழில் நுட்ப (மெக்கானிக்கல்) டிப்ளோமா (N.D.T. Mech.) தகைமைச் சான்றிதழுடன் குறைந்தது இரண்டு வருட அனுபவம்,

அல்லது

(ஆ) தேசிய தொழில் நுட்பவியல் தேர்வு (இயந்திரவியல்) (N.C.T. Mech ) ஐந்துவருடஅனுபவம்.

அல்லது

(இ) இவற்றிற்குச் சமமான வேறு தராதரம்.
(ஈ) நீண்ட கால அனுபவமுடையவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.

**2. வாகனங்கள் திருத்துனர்கள்**

(அ) மோட்டார் சைக்கிள் திருத்த வேலை.
(ஆ) கார், வான் முதலிய இலகு வாகனங்கள் திருத்தும் வேலை.
(இ) கனரக வாகனத்திருத்த வேலை.
(ஈ) வாகனங்களுக்கு பொடி அமைக்கும் வேலை (கூடார வேலை)
(உ) வாகனங்களுக்கு மின் இணைப்பு வேலை (ஏ. சி (A. C.) யும் டி. சியும் (D. C) தெரிந்தவர்கள்)

**3. களஞ்சியக் காப்பாளர்**

(அ) மூலப்பொருள் விநியோகம், இயந்திரவியல் சம்பந்தமான களஞ்சிய முகாமைத்துவம் போன்றவற்றைப் பேணும் அங்கீகரிக்கப்பட்ட அரச / தனியார் நிறுவனமொன்றில் களஞ்சியக் காப்பாளராக குறைந்தது ஐந்து வருடங்கள் கடமையாற்றிய அனுபவம்.

அல்லது

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை அல்லது அதற்குச் சமமான அரச / தனியார் நிறுவனமொன்றில் குறைந்தது நான்கு வருட தொழில் அனுபவம் உடையவர்கள்

**4. தொழிலாளர்கள்**

பயிற்றப்பட்ட தொழிலாளர்களும் (வீதிவேலை. தார்வேலை, தச்சுவேலை, மேசன் வேலை உட்பட) சாதாரண தொழிலாளர்களும் அடங்குவர்.

இடம் : வேலைப் பகுதி
தமிழீழ நிர்வாகசேவை,
கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பொறுப்பாளர்
தமிழீழ நிர்வாகசேவை

(சி-10939)

**சிந்தனைக்கு..**

தனி மனிதர்கள் சில சமயம் அறிவின்
உந்துதலில் நடக்கக் கூடும்.
ஆனால் ஒரு கூட்டத்தினர் ஒரு போதும்
அவ்வாறு நடக்க மாட்டார்கள்.

- வில்லியம் இஞ்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## ஒரு கல்லில் இரு மாங்காய்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான அரசாங்கம் இராணுவத் தலைமைப் பீடக் கட்டமைப்பை, பலமுள்ளதாக்க ஆக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. இதன் அடிப்படையில் இராணுவ தலைமைப்பீடம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பானது. கூட்டுப் படைத்தலைமையகம் இருந்த வரையில் ஒரு ஜெனரல் ஒரு லெப். ஜெனரல், ஐந்து மேஜர் ஜெனரல் என்றஉயர் நிலை அதிகாரிகளைக் கொண்டதாக இருந்தது. இந்த வகையில் இராணுவத்தரப்பின் உயர் அதிகாரியாக லெப். ஜெனரல் தரத்தில் இருந்தார்.

அதன் பின்னர், கூட்டுப்படைத் தலைமை அற்ற நிலையிலும், லெப். ஜெனரல் ஒருவரின் கீழே இராணுவம் இருந்தது. அதன் கீழ் முன்னையது போலவே மேஜர் ஜெனரல்களின் அளவும் ஐந்தாகவே இருந்தது.

இதேசமயம் இரண்டாம் கட்ட ஈழப்போரில், விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல் சிறிலங்கா இராணுவத் தலைமையைசிர்குலைத்தது. சில தளபதிகள் கொல்லப்பட, சிலர் பதவி துறக்க வேண்டிய நிலையும் வந்தது. இந்த வகையில், லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கொல்லப்பட்டமையும், லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணா பதவி விலகியமையும் முக்கியமானதாகும் அத்தோடு சில மேஜர் ஜெனரல்கள் ஒய்வு பெற்றும் சென்றனர்.

இந்தவகையில், ஏற்பட்ட வெற்றிடங்கள் அப்போதைய ஐ.தே.க. அரசால் நிரப்பப்பட்டே வந்தன. இருப்பினும் இராணுவக் கட்டமைப்பின் உயர் பீடத்தின் எண்ணிக்கை அதிகரிப்பை பெரியளவில் மேற்கொள்ளவில்லை என்றே கூறலாம். அந்த வகையில் சந்திரிகா அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையினால் சிறிலங்கா இராணுவத் தலைமைப்பீடத்தில் ஆளணியின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ் அதிகரிப்பானது முன்னைய அளவை விட சுமார் இரண்டு மடங்குகள் அதிகமாகும்.

இவ் இராணுவத் தலைமைப்பீட விரிவாக்கமானது

# மருதங்கேணி கல்விக்கோட்டம் எதிர்நோக்கும் பெரும் நெருக்கடிகள்

செய்திக் கட்டுரை
எம். கே. யோகரட்ணம்
(வடமராட்சி செய்தியாளர்)

யாழ், கல்வித் திணைக்களத்தின் வலயம் II இல் வடமராட்சிக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தினமும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

வடமராட்சியில் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி கோட்டங்களில் மருதங்கேணி கல்விக் கோட்டத்திலேயே மாணவர்களின் கல்வி நிலை பாழடையும் வகையில் பலபலபிரச்சினைகள் ஒன்றன் பின் ஒன்றாக தலை தூக்கி நிற்கின்றன.

இக்கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் கல்வியைக் கற்று சிறந்த பெறுபேறுகளை பெறமுடியாமல் இருப்பதற்கு அங்கே போதிய கல்வி வளங்கள் இல்லாததே மூலகாரணமாக இருந்துள்ளது. இந்தக் கோட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது கரவெட்டி, பருத்தித்துறை கோட்டங்களில் கல்வி வளங்கள் ஓரளவு திருப்தியடைந்திருப்பது கண்கூடு.

இக்கோட்டத்தில் போதிய கல்வி வளங்களை உரியவர்கள் செய்து கொடுக்கத் தவறி வருவதினால் இப்பகுதி மாணவர்கள் இடைநடுவே தமது கல்விக்கு முழுக்குப்போட்டுக் கொள்கின்றனர். மாணவர்கள் மத்தியில் ஏற்படுகின்ற விரக்தியே அங்குள்ள மாணவர்களை கல்வியிலிருந்து ஒதுங்க வைக்கிறது. அங்குசீரான முக்கிய கல்வி வளங்கள் இல்லாத காரணத்தினால் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தியடைந்தவையாக கருத முடிய வில்லை.

இந்தக் கோட்டத்தில் பல்வேறு துறைகளிலும் பல பாதிப்புக்கள், குறைபாடுகள் பல நீண்டகாலமாக தீர்ந்து போகாத நிலையில்இன்னமும் இருந்து வருகிறது.

இக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக கல்வி நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இக் கோட்டப் பாடசாலைகள் மீது கவனம் குறைந்து வருவதினால் இக் கோட்டப் பாடசாலைகளின் வளர்ச்சி மந்தகதி நிலையிலேயே காணப்படுகிறது.

இக் கோட்டம் வடமராட்சியில் உள்ள மற்றைய கல்விக்கோட்டங்களிலும் ...

மூலம் அறிய முடிகிறது. இங்குள்ள மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வமும் ஊக்கமும் நிறைந்திருக்கின்ற போது அம்மாணவர்களின் தேவைக்கேற்ப கல்வி வளங்கள் போதுமான அளவு இல்லாததினால் அம்மாணவர்களின் திறமை மழுங்கடிக்கப்படுகின்றன. கரவெட்டி பருத்தித்துறை கோட்டங்களில் கல்வி பயிலும் அக்கோட்டத்தைச் சேர்ந்த மாணவர்களின் கல்விநிலையில் இருந்து இந்த உண்மையை அறியக் கூடியதாக இருக்கிறது.

எந்தச் செல்வமும் காலம் கடந்த போதிலும் பெற்றுக் கொள்ளலாம் ஆனால் கல்விச் செல்வம் உரிய நேரத்தில் தான் பெறமுடியும் இந்த உண்மையை ஆசிரியர்களோ, பெற்றோரோ, கல்வி அதிகாரிகளோ அறியாத ஒன்றல்ல.

மருதங்கேணி கல்விக்கோட்டத்தில் ஆசிரியர்கள் பற்றாக்குறை, வகுப்பறை கட்டட வசதிகள் பற்றாக்குறை, தளபாடம் பற்றாக்குறை, அதிபர் பற்றாக்குறை, கல்விக்கோட்டத்திற்கு நிரந்தர கட்டட வசதிகள் இல்லாத பெரும் பற்றாக்குறை, பாடசாலைகளில் குடிநீர் பிரச்சினை, விளையாட்டு மைதானம் இல்லாத நிலை, விஞ்ஞான ஆய்வு கூடங்கள் போதுமான அளவு இல்லாத குறை, ஆசிரியர்களுக்கான விடுதிகள் ஒன்றுமே இல்லாத பற்றாக்குறை என்பன தலைதூக்கி நிற்கின்றன.

இக் கோட்டத்தில் பதினொரு பாடசாலைகள் இருந்தன. இவற்றில் இராணுவ நடவடிக்கையினால் வேவில் அ. த. க பாடசாலை, போக்கறப்பு அ. த. க. பாடசாலை என்ற இரண்டு பாடசாலைகளும் மூடப்பட்டன.

இங்கு இரண்டு பாடசாலைகளிலும் கல்வி பயின்ற 108 மாணவர்கள் இன்று கிளிநொச்சியில் தங்கி வருகின்றனர். இவர்களுக்கு சீரான கல்வி வசதியை உரியவர்கள் ஏற்படுத்திக் கொடுக்கத் தவறி விட்டனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

... லைக்கேணி பரமேஸ்வராக் கல்லூரி, குடத்தனை கரையோரம் றோ. க. வித்தியாலயம், குடத்தனை கரையோரம் அ. மி. த. க. பாடசாலைகளில் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகள் சிதைந்து போன நிலையில் மழை நீர் வகுப்பறையில் சிந்தும் வகையில் மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

மருதங்கேணி கோட்டத்தை பொறுத்த மட்டில் இன்னமும் மேலும் முப்பது ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

நடன ஆசிரியர்கள் ஆறு பேர், சங்கீத ஆசிரியர்கள். ஐந்து பேர், சித்திர ஆசிரியர்கள் நான்கு பேர், ஆரம்ப ஆசிரியர்கள் பத்துப் பேர், ஆங்கில ஆசிரியர்கள் ஐந்து பேர், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வர்த்தகம், கணக்கியல் பாடங்களுக்கான பட்டதாரி ஆசிரியர் ஒருவர், கலைப்பட்டதாரி ஆசிரியர்கள் மூவர் இன்னமும் இக்கோட்டத்திற்கு தேவைப்படுகின்றனர்.

தற்போது இக்கோட்டத்தில் நடனத்திற்கு ஆசிரியர்கள் எவரும் இல்லை, சங்கீதப் பாடத்திற்கு இரண்டு ஆசிரியர்கள் மட்டும் உள்ளனர். சித்திரப் பாடத்திற்கு ஒரு ஆசிரியர் மட்டும் இருந்துள்ளார். ஆரம்ப ஆசிரியர்கள் இருபத்திரண்டு பேர் மட்டுமே பணி புரிகின்றனர். ஆங்கிலப் பாடத்திற்கு எட்டு ஆசிரியர்கள் இருக்கின்றனர். கலைப் பட்டதாரிகளாக ஏழு ஆசிரியர்கள் இருக்கின்றனர்.

போதியளவு ஆசிரியர்கள் இல்லாத நிலையில் மாணவர்களுக்கு சகல பாடங்களையும் ஒழுங்காக கல்வி கற்பிக்க முடியாத ஒரு அபாய சூழல் காணப்படுகின்றது. இக் கோட்டத்தில் நடன ஆசிரியர்கள் எவரும் இல்லாததினால் இந்தப் பாடம் செயலிழந்து வருகிறது. எதிர்வரும் பரீட்சைகளில் மாணவர்கள் இப் ...

பாடங்களுக்கு போதிய ஆசிரியர்கள் இல்லாததினால் மாணவர்கள் இப் பாடங்களைக் கற்று பரீட்சைகளுக்கு தோற்ற முடியாமல் மனமுடைந்த நிலையில் உள்ளனர். இவ்வாறாக ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கும் போது இந்தப்பாடங்களில் மாணவர்கள் எப்படி சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளை பெற முடியும்?

இக்கோட்டத்தில் தளபாடப் பற்றாக்குறைகள் இருந்து வருகின்றன. இப்பற்றாக்குறை காரணமாக குறித்த பாடசாலை மாணவர்கள் திண்ணைகளிலும், மரநிழல்களிலும் கல்வியைக் கற்கும் அவலம் காணப்படுகின்றது. ஆழியவளை, குடைத்தனை கரை அ.மி.த.க, உடுத்துறை, குடத்தனை கரை றோ. க. பாடசாலை போன்ற நான்கு பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறை தாண்டவமாடுகிறது, இக் கோட்டத்தில் உள்ள பாடசாலைக் கட்டடம் பற்றாக்குறை உள்ளது. மாணவர்களின் தொகைக்கேற்ப கட்டடங்கள் போதாத நிலை உருவாகிவருகிறது. கட்டடப் பற்றாக்குறையால் வகுப்புக்கள் நெருக்கமாக வைக்க வேண்டிய சூழ்நிலை உருவெடுந்துள்ளது.

இவைமட்டுமல்ல இக்கோட்டத்தில் அதிபர் பற்றாக்குறையும் காணப்படுகிறது. வெற்றிலைக்கேணி பரமேஸ்வராக் கல்லூரி, நாகர்கோயில் அ. மி. த. க. பாடசாலை ஆகிய இரண்டு பாடசாலைகளில் நிரந்தர அதிபர்கள் இல்லாத நிலை நீடித்துள்ளது. இந்தப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பதில் அதிபராக கடமைபுரிகின்றனர்.

மருதங்கேணி கல்விக்கோட்டத்திற்கென தனியான கட்டடங்கள் இல்லை. தனியார் வீட்டிலேயே இக்கோட்டம் செயற்படுகிறது.

இக்கோட்டத்தில் சில பாடசாலைகளில்குடிநீர்பிரச்சினையும் இல்லாமல்போகவில்லை. மாமுனை குடத்தனை அ. மி. த. க., குடத்தனை அ. த. க., அம்பன் அ. மி. த. க. தாளையடி றோ. க பாடசாலைகளில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளது. இப்பாடசாலைகளில் கிணறு, ...

நிலையில் அதிகமான பாடசாலைகள் உள்ளன. இப் பகுதி மாணவர்கள் போதிய ஆசிரியர்கள் இல்லாமல் கல்வியைத்தான் கற்க முடியாமல் போன போதிலும் விளையாட்டுக்களில் கூட மாணவர்கள் தேர்ச்சியடைய முடியவில்லை. இப்பகுதி மாணவர்களுக்கு விளையாட்டுத்துறை பாக்கியம் கூட இல்லாமல் போய் விட்டது.

மணற்காடு றோ. க. பாடசாலை, அம்பன் அ.மி.த.க. பாடசாலை, குடத்தனை கரையோர அ.மி.த.க. பாடசாலை, குடத்தனை கரையோர றோ.க. பாடசாலை, நாகர் கோயில் மகா வித்தியாலயம், நாகர் கோயில் அ. மி.த.க.பாடசாலைமாமுனை பாடசாலை, செம்பியன்பற்று றோ. க. பாடசாலை ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை வெற்றிலைக்கேணி பரமேஸ்வராக் கல்லூரி, மருதங்கேணி இ.த.க. பாடசாலை, ஆகிய பாடசாலைகளில் விளையாட்டு மைதானம் இல்லாத குறை நீங்கவில்லை.

க. பொ. த. சாதாரண பாடசாலைகள் சிலவற்றில் விஞ்ஞான ஆய்வு கூட வசதியில்லை இக்கோட்டத்தில் உடுத்துறை மகா வித்தியாலயத்தில் மட்டும் ஆய்வு கூடம் உள்ளது.

மேலும் ஆசிரியர்கள், கல்விக் கோட்ட அதிகாரிகளுக்கான விடுதி வசதிகள் எதுவும் கிடையாது. விடுதிகள் இல்லாததினால் ஆசிரியர்கள்அதிகாரிகள் அங்கு தங்கியிருந்து பணியாற்ற முடியாமல் திண்டாடுகின்றனர். விடுதி வசதிகள் இருக்குமானால் ஆசிரியர்கள் அங்கு தங்கியிருந்து மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த முடியும். விடுதிகள் இல்லாததினால் ஆசிரியர்கள் இப் பகுதிக்குச் சென்று சேவையாற்ற பின் நிற்கின்றனர்.

பின் தங்கிய இப் பகுதி மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த கல்வித்திணை ...

லைப்புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல் சிறிலங்கா இராணுவத் தலைமையைசிர்குலைத்தது. சில தளபதிகள் கொல்லப்பட, சிலர் பதவி துறக்க வேண்டிய நிலையும் வந்தது. இந்த வகையில், லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கொல்லப்பட்டமையும், லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணா பதவி விலகியமையும் முக்கியமானதாகும் அத்தோடு சில மேஜர் ஜெனரல்கள் ஓய்வு பெற்றும் சென்றனர்.

இந்தவகையில், ஏற்பட்ட வெற்றிடங்கள் அப்போதைய ஐ.தே.க. அரசால் நிரப்பப்பட்டே வந்தன. இருப்பினும் இராணுவக் கட்டமைப்பின் உயர் பீடத்தின் எண்ணிக்கை அதிகரிப்பை பெரியளவில் மேற்கொள்ளவில்லை என்றே கூறலாம். அந்த வகையில் சந்திரிகா அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையினால் சிறிலங்கா இராணுவத் தலைமைப்பீடத்தில் ஆளணியின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ் அதிகரிப்பானது முன்னைய அளவை விட சுமார் இரண்டு மடங்குகள் அதிகமாகும்.

இவ் இராணுவத் தலைமைப்பீட விரிவாக்கமானது சந்திரிகா அரசாங்கத்தைப் பொறுத்து இரு நோக்கம் கொண்டவை என்பதைத் துணிந்து கூறலாம். முதலாவதாக இராணுவத் தலைமைப்பீடத்தை வலுவுள்ளதாக ஆக்குதல், இரண்டாவதாக இராணுவத் தலைமைப்பீடத்தில் அரசாங்கத்திற்குச் சார்பான அணி ஒன்றை உருவாக்குதல் ஆகும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியானது 17 வருடங்களுக்கு பின்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது. ஆனால் இக் காலப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் கண்ட வளர்ச்சியோ மிகப் பெரிதாகும். அத்தோடு இராணுவத்தலைமையும் தம்மை வளர்த்த ஐ.தே.க. மீதே விசுவாசத்துடன் வளர்ந்திருந்தது. சுதந்திரக்கட்சிக்கு ஆதரவாக இருந்த டென்சில் கொப்பேகடுவ போன்றோரும் போரில் கொல்லப்பட்டுவிட்டனர்.

இந்நிலையில், தமக்கு விசுவாசமான இராணுவத் தலைமை கீழ் மட்டத்தில் இருந்தே தெரிவு செய்ய வேண்டிய நிரப்பந்தம் அரசாங்கத்திற்கு எழுந்துள்ளது எனலாம். இதன் காரணமாகவே அநேகருக்குப் பதவி உயர்வு வழங்குவதன் மூலம் இராணுவத் தலைமைப் பீடத்தில் தங்கள் பலத்தை அதிகரிப்பதோடு இராணுவத்தையும் தமக்கு விசுவாசமாகச் செயற்பட வைப்பதே அரசாங்கத்தின் நோக்கம் எனலாம்.

மேலும் சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுக்கள் மூலமே தீர்வுகாண விரும்புவதாகக் கூறிக் கொண்ட போதும், இராணுவத் தீர்வையும் சிந்திக்காமலும், இராணுவத்தைஓரம் கட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் இல்லை இராணுவத் தலைமைப்பீடத்தை வலுவுள்ளதாக்கி போருக்கு எப்பொழுதும் தயார் நிலையிலேயே வைத்திருக்கும் நோக்கம் கொண்டதாகவே செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் சிதைந்து போயுள்ள இராணுவக் கட்டமைப்பை சீர்செய்யும் வகையாகவும் இவ் இராணுவ கட்டமைப்பின் உயர் மட்டத்தில் செய்யப்பட்டுள்ள விரிவாக்கத்தைக் கொள்ள முடியும்.

இந்த வகையில், இக்கட்டமைப்பு விரிவாக்கம் என்பது ஒரு கல்லில் இரு மாங்காய் அடிக்கும் அரசின் திட்டம் என்றே கொள்ளலாம். ஆனால் இதில் ஒரு நோக்கம் சில சமயம் அரசிற்கு அனுகூலமாகலாம். இதன் மூலம் இராணுவத் தலைமைப்பீடத்தில் தமது ஆட்களை அதிகரிப்பதன் மூலம் ராணுவத்திற்குள் தமது நிலையை உறுதி செய்து கொள்ள முடியும். ஆனால் மற்றைய நோக்கமான இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு குறித்துச் சிந்திப்பது வெற்றி தரப் போவதில்லை. ஏனெனில், இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்ற சிந்தனை ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டு விட்டதொன்றாகும்.

பேறுகள் திருப்தியடைந்தவையாக கருத முடியவில்லை.

இந்தக் கோட்டத்தில் பல்வேறு துறைகளிலும் பல பாதிப்புக்கள், குறைபாடுகள் பல நீண்டகாலமாக தீர்ந்து போகாத நிலையில்இன்னமும் இருந்து வருகிறது.

இக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக கல்வி நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இக் கோட்டப் பாடசாலைகள் மீது கவனம் குறைந்து வருவதினால் இக் கோட்டப் பாடசாலைகளின் வளர்ச்சி மந்தகதி நிலையிலேயே காணப்படுகிறது.

இக் கோட்டம் வடமராட்சியில் உள்ள மற்றைய கல்விக்கோட்டங்களிலும் பார்க்க கல்வி நிலையில் வளர்ச்சி குறைந்து சீரற்ற பரீட்சைப் பெறு பேறுகளினாலும் பெற்றோர்கள் மத்தியில் தாழாத சோகம் வேரூன்றி நிற்கிறது. கல்வித்தரத்தில் இது நீண்ட தூரம் பின் தங்கி நிற்கிறது. இறுதியாக வெளி வந்த பரீட்சைப் பெறுபேறுகள் மூலம் இதை அறியக் கூடியதாக உள்ளது.

க.பொ.த. உயர்தரம், க.பொ.த. சாதாரணம், ஆண்டு 5 புலமைப் பரிசில் போன்ற பரீட்சைப் பெறுபேறுகள், இறுதியாக வெளி வந்த பரீட்சை முடிவுகள் இல்லாத குறை, ஆசிரியர்களுக்கான விடுதிகள் ஒன்றுமே இல்லாத பற்றாக்குறை என்பன தலைதூக்கி நிற்கின்றன.

இக் கோட்டத்தில் பதினொரு பாடசாலைகள் இருந்தன. இவற்றில் இராணுவ நடவடிக்கையினால் வேவில் அ.த.க பாடசாலை, போக்கறப்பு அ.த.க. பாடசாலை என்ற இரண்டு பாடசாலைகளும் மூடப்பட்டன.

இங்கு இரண்டு பாடசாலைகளிலும் கல்வி பயின்ற 108 மாணவர்கள் இன்று கிளிநொச்சியில் தங்கி வருகின்றனர். இவர்களுக்கு சீரான கல்வி வசதியை உரியவர்கள் ஏற்படுத்திக் கொடுக்கத் தவறி விட்டனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. மேற் குறித்த இரண்டு பாடசாலை மாணவர்கள் மதகுரு ஒருவர், ஆசிரியர்கள் சிலரை நியமித்து தனிப்பட்ட ரீதியில் கல்வி வழங்கி வருவதாகவும் மேலும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தப் பாடசாலைகளில் ஆண்டு 1 முதல் 5 வரையில் இருந்த மாணவர்களே இவ்வாறு ஒரு பரிதாப நிலையில் இருக்கின்றனர். மூடப்பட்ட பாடசாலையைத் தவிர ஒன்பது பாடசாலைகள் தற்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதில் ஒரு பாடசாலையே உயர்தர வகுப்பைக் கொண்டது, வெற்றி யர்கள் மட்டும் உள்ளனர். சித்திரப் பாடத்திற்கு ஒரு ஆசிரியர் மட்டும் இருந்துள்ளார். ஆரம்ப ஆசிரியர்கள் இருபத்திரண்டு பேர் மட்டுமே பணி புரிகின்றனர். ஆங்கிலப் பாடத்திற்கு எட்டு ஆசிரியர்கள் இருக்கின்றனர். கலைப் பட்டதாரிகளாக ஏழு ஆசிரியர்கள் இருக்கின்றனர்.

போதியளவு ஆசிரியர்கள் இல்லாத நிலையில் மாணவர்களுக்கு சகல பாடங்களையும் ஒழுங்காக கல்வி கற்பிக்க முடியாத ஒரு அபாய சூழல் காணப்படுகின்றது. இக் கோட்டத்தில் நடன ஆசிரியர்கள் எவரும் இல்லாததினால் இந்தப் பாடம் செயலிழந்து வருகிறது. எதிர்வரும் பரீட்சைகளில் மாணவர்கள் இப் பாடத்திற்கு தோற்ற முடியாத நிலையில் இக்கல்வியில் ஒரு பாதிப்பை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

அதே போன்று சங்கீத பாடத்திற்கும் இரண்டு ஆசிரியர்களை வைத்து ஏழு பாடசாலை மாணவர்களுக்கு இப் பாடத்தை புகட்ட வேண்டிய ஒரு அவல நிலை தோன்றியிருக்கின்றது. சித்திரப்பாடம் ஒரு ஆசிரியரை வைத்து ஆறு பாடசாலை மாணவர்களின் கல்வி நிலையைத் தேற்ற வேண்டியுள்ளது. மேற்குறித்த நிலை நீடித்துள்ளது. இந்தப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பதில் அதிபராக கடமைபுரிகின்றனர்.

மருதங்கேணி கல்விக்கோட்டத்திற்கென தனியான கட்டடங்கள் இல்லை. தனியார் வீட்டிலேயே இக்கோட்டம் செயற்படுகிறது.

இக்கோட்டத்தில் சில பாடசாலைகளில்குடிநீர்பிரச்சினையும் இல்லாமல்போகவில்லை. மாமுனை குடத்தனை அ.மி.த.க., குடத்தனை அ.த.க., அம்பன் அ.மி.த.க. தாளையடி றோ.க பாடசாலைகளில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளது. இப்பாடசாலைகளில் கிணறு, குழாய்க்கிணறுஎன்பன கிடையாதுகோடைகாலத்தில்மாணவர்களுக்குதாகம் எடுக்கின்ற போதுஅருகில்உள்ள வீடுகளுக்கு தண்ணீர்தேடிபடையெடுப்பர். இப் பாடசாலை மாணவர்கள் குடிநீர் இல்லாமல் நாவறண்ட நிலையில் கல்வி கற்க வேண்டியவர்களாகவுள்ளனர். நாகர் கோயில் மகாவித்தியாலயத்தில்கிணறு இருக்கின்ற போதிலும்கிணறு மாசடைந்ததினால் இக் கிணற்று நீர் பருக முடியாத நிலை காணப்படுகிறது.

இக்கோட்டத்தில் விளையாட்டு மைதானம் இல்லாத கிடையாது. விடுதிகள் இல்லாததினால் ஆசிரியர்கள்அதிகாரிகள் அங்கு தங்கியிருந்து பணியாற்ற முடியாமல் திண்டாடுகின்றனர். விடுதி வசதிகள் இருக்குமானால் ஆசிரியர்கள் அங்கு தங்கியிருந்து மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த முடியும். விடுதிகள் இல்லாததினால் ஆசிரியர்கள் இப் பகுதிக்குச் சென்று சேவையாற்ற பின் நிற்கின்றனர்.

பின் தங்கிய இப் பகுதி மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த கல்வித்திணைக்களம் வேண்டிய ஆக்க பூர்வமான நடவடிக்கையில் தனது கவனத்தைச் செலுத்தி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த பாடுபட வேண்டும். இங்கு வேண்டிய கல்வி வளங்களை வழங்கி மாணவர்களின் கல்வித்தரம் தொய்ந்து போகாமல் பாதுகாக்க வேண்டும். உரிய நடவடிக்கைகள் எடுக்கத் தவறின் போன பஸ்ஸிற்கு கை காட்டிய நிலையாகி விடும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க மாட்டாது.

## யாழ். அரச ஊழியர்க்கு நட்டஈடு அதிகரிப்பு

(கொழும்பு)

வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்டஅரச ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த 12½ சதவீத நட்டஈடு கொடுப்பனவு எதிர்காலத்தில் 50 சதவீதமாக அதிகரிக்கப்படவுள்ளது இம்மாவட்டத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் வன்செயல் நடவடிக்கையின் போது தமக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக ஆவணங்களை சமர்ப்பிக்க தவறியதன் காரணமாகஅவர்களுக்குஇதுவரை பன்னிரண்டரை சதவீத நட்டஈடு வழங்கப்பப்பட்டது. ஆனால் இக்கொடுப்பனவு போதுமானதாக இருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் ஏற்கனவே நட்டஈடாக பன்னிரண்டரை சதவீதம் பெற்ற அரச ஊழியர்களுக்கு மீதித் தொகைவழங்கப்படவுள்ளது.

## அரச வங்கிகளில் 600 கோடி ரூபா நிலுவை

300 க்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்களும் தொழில் அதிபர்களும் வங்கிகளில் இருந்து பெற்ற 600 கோடி ரூபாவிற்கும் அதிகமான தொகையை திருப்பி செலுத்தாமல் இருப்பதாக கூறப்படுகின்றது. கடந்த 12 ஆண்டுகளில் மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் அரச வர்த்தக வங்கிகளிடமிருந்து கடன்கள் பெறப்பட்டுள்ளன.

பணத்தை ஒழுங்காக செலுத்தாதவர்கள் என்ற பட்டியலில் உள்ளோர்க்கும் இந்த வங்கிகள் கடன் வழங்கியுள்ளன. அரசியல் செல்வாக்கு மூலம் தொழில் அதிபர்கள் பல சலுகைகளை பெற்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இத்தகைய கடன் மீளளிக்காதவர்களுக்கு எதிராக புதிய அரசு சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது.

## சிறிலங்கா தூதரக ஊழியர் அரசியல் தஞ்சம் கோரல்

### வெளிநாட்டமைச்சர் கவலை

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள சிறிலங்காத் தூதரகங்களில் தொழில் பார்க்கும் ஊழியர்கள் சிலர் அந்நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி நாட்டிற்கு இழுக்கை தேடுகின்றனர் என வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கவலை தெரிவித்துள்ளார்.

அரசியல் தஞ்சம் கோரியுள்ள ஊழியர்களுக்கு பதிலாக புதிய ஊழியர்களை நியமிக்க கேட்கும் போது அந்நாடுகள் மறுப்பு தெரிவிக்கின்றன. லண்டனில் உள்ள சிறிலங்கா தூதரகத்தில் பணியாற்றிய இவான்ஸ் கூரே என்பவரை நாடு திரும்புமாறு அரசு கேட்ட போது அவர் மறுத்து பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார். ஜனாதிபதி பிரேமதாசா கொலையின் பின் இவர் லண்டனில் உள்ள சிறிலங்கா தூதரகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார். வெளிநாட்டு சேவையில் 35 வெற்றிடங்கள் உள்ளன என்றும் அவர் கூறினார்.

## ரிட்ஜ்வே வைத்தியசாலை தாதிக்கு ஏற்பட்ட கோபம்

(கொழும்பு)

பொரளை லேடி ரிட்ஜ்வே வைத்திய சாலையில் யாழ்.வாசி ஒருவர் அங்கு பணி புரியும் சிங்கள தாதி ஒருவரால் கடுமையான வார்த்தைகளால் தாக்கப்பட்டுள்ள சம்பவம் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி பெண்ணின் தங்கையின் மகள் சுகவீனமுற்று ரிட்ஜ்வே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் 3 ஆம் வார்ட்டில் தங்கியிருந்த அவருக்கு உதவியாக நின்ற இவர் இரவு நித்திரை மயக்கத்தில் கட்டிலின் மீது தலை வைத்து உறங்கினார். அப்போது அங்கு வந்த தாதி ஒருவர் அவரிடம் வந்து உங்களைப் போன்ற யாழ்ப்பாணத் தமிழர்கள் இங்கு வந்து கட்டில்களை உடைத்து விட்டு போய் விடுவீர்கள் எமது சிங்கள மக்கள்தான் கஷ்டப்பட வேண்டியுள்ளது என ஆவேசமாக பேசினாராம்.

# செசன்யா கேந்திர நிலையங்கள் மீது ரஷ்ய விமானங்கள் தாக்குதல்

(மொஸ்கோ),

செசன்யாவின் கேந்திர ஸ்தானங்கள் மீது ரஷ்ய யுத்த விமானங்கள் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளன.

செசன்யா வீரர்கள் ஆயுதங்களைக் கைவிடுவதற்கு நேற்று முன்தினம்வரை ரஷ்யா கால அவகாசம் வழங்கியிருந்தது. முழு அளவில் தாக்குதல் ஆரம்பிக்கப்படாவிட்டாலும் அந்த நாட்டின் மூன்று வருடகால சுதந்திரத்தை முடிவிற்குக் கொண்டுவருவதற்கென பாரிய தாக்குதல்களுக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக நம்பப்படுகிறது.

அயலிலுள்ள குடியரசுகளில் இருந்து புறப்பட்ட ரஷ்ய யுத்த விமானங்கள் செசன்யாவிலுள்ள முக்கியமான இடங்களில் குண்டுகளை வீசித்தாக்கின. இரத்தக்களரியைத் தவிர்ப்பதற்கென இறுதிச் சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என செசன்யா ஜனாதிபதி அறிவித்த போதிலும் ரஷ்யர்கள் இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளனர்.

கால எல்லை முடிவடைவதற்கு மூன்று மணித்தியாலங்கள் இருக்கையில் பேச்சுவார்த்தைக்குத் தாம்தயார்என்று செசன்யா ஜனாதிபதி விடுத்த அறிவிப்பு தமக்கு காலம் தாழ்த்தி கிடைத்ததாக ரஷ்யர்கள் தெரிவித்துள்ளனர்.

# மீரிகம கொள்ளை குறித்து இரு சந்தேகநபர்கள் கைது

(கொழும்பு)

வெர்டெக்ஸ் புடவைத் தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளப் பணமான 75 லட்சம் ரூபா மீரிகாமம் பகுதியில் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக இருசந்தேக நபர்கள் குற்றத் தடுப்பு பணியகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதனன்று கைது செய்யப்பட்டுள்ள இருவரில் ஒருவர் கொள்ளைக் கோஷ்டிக்கு தகவல் கொடுப்பவர் எனவும் மற்றவர் கொள்ளைக் கோஷ்டியினர் ஒளிந்திருப்பதற்கு தங்குமிடம் ஏற்பாடு செய்தவர் எனவும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

# உள்ளூராட்சி சபைகள் டிச. 31 இல் கலைக்கப்படும்?

## புதியதேர்தல்கள் பெப்ரவரியில்

(கொழும்பு)

அனைத்து உள்ளூராட்சி சபைகளும் இம்மாதம் 31 ஆம் திகதியுடன்கலைக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது. பிரதேசசபை, மாநகரசபை, நகரசபை, தேர்தல்கள் பெப்ரவரி நடுப்பகுதியில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைகளுக்கு 1990 இல் இறுதியாக தேர்தல் நடந்தது. நான்கு வருட காலப்பகுதி இம்மாதத்துடன் முடிவடைகிறது. அத்தேர்தலில் பெருவெற்றி பெற்ற ஐ.தே. க. தற்போது பல உள்ளூராட்சி சபைகளை தனது கட்டுப்பாட்டிலேயே வைத்துள்ளது. உள்ளூராட்சி சபை கலைப்பு பற்றிய அறிவித்தல் டிசம்பர் 30 நள்ளிரவு ஜனாதிபதியால் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. நியமனப்பத்திரத் தாக்கல் ஜனவரி 12 ஆம் திகதியாக அமையலாம்.

# கூட். மொ. வி. ஸ்தாபனம் யாழ்.மாவட்டத்தில் திறப்பு?

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் விரைவில் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தை புதிதாக இயங்க வைப்பதற்காக இதன் ஓய்வு பெற்ற ஊழியர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இத்தாபனம் முன்னர் செயல்பட்ட காலத்தில் பணியிலிருந்து விலகிக் கொண்டவர்கள் வேறிடங்களில் தற்போது பணிபுரிகிறவர்கள் ஓய்வு பெற்றவர்கள் இதற்காக அழைக்கப்பட்டுள்ளனர்

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் இத்தாபனம் செயற்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தாபனத்தால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மொத்தமாக அரச கட்டுப்பாட்டு விலைக்கு விநியோகம் செய்யப்படும் என தெரிய வருகின்றது. (தி)

# சடலம் கரை ஒதுங்கியது

மன்னார் தீவினுள் இருக்கும் புதுக்குடியிருப்பு பகுதியில் ஒரு ஆணின் சடலம் கரையொதுங்கியுள்ளது. எனினும் இவரைப் பற்றிய விபரம் எதுவும் தெரியவரவில்லை.

# சிறுபான்மையர் பிரதிநிதித்துவத்திற்கு மிதக்கும் ஆசனமுறை கொண்டு வருக

## இ.தொ.கா. பிரமுகர் தேவராஜ் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அப்பால் இருக்கும் சிறுபான்மை மக்களுக்கு தகுந்த பிரதிநிதித்துவம் கிடைப்பதை உறுதிப்படுத்தும் முகமாக ''மிதக்கும் ஆசன முறை'' ஒன்று வகுக்கப்பட வேண்டும். இவ்வாறு இ.தொ.காவின் முக்கிய பிரமுகரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இந்து கலாசார அமைச்சருமான பீ.பீ. தேவராஜ் கூறியுள்ளார்.

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நிகழ்ந்த ஆய்வரங்கக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த பிரதேசங்களில் தமிழ் மக்கள் சில இடங்களில் செறிந்தும், பரந்தும் வாழ்கின்றார்கள். உதாரணமாக நுவரெலியாவில் 54வீதமும், பதுளையில் 20 வீதமும், கண்டியில் 15வீதமும், மாத்தளையில் 12 வீதமும், தென்மாகாணத்தில் 3 வீதமும் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். மேல் மாகாணத்தில் கூட மொத்த சனத்தொகையில் 18 சதவிகிதம் தமிழர்கள் தான். இதன்படி 48 பாராளுமன்ற ஆசனங்களைக் கொண்ட மேல் மாகாணத்தில் 9 ஆசனங்கள் தமிழர்களுக்கு கிடைத்திருக்க வேண்டும். ஆனால் இன்றைய தேர்தல் முறைப்படி ஒரு ஆசனமும் கிடைக்காமற்போகும் வாய்ப்பு உள்ளது. எனவே தான் குறிப்பிட்ட மாகாணத்தில், சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் பெறாவிட்டால் அந்தக் குறையை நிவர்த்தி செய்ய மிதக்கும் ஆசன முறைபயன்படுத்தப்படலாம். இம் முறை சுவீடன், டென்மார்க் நாடுகளில் அமுல் நடத்தப்படுகிறது எனவும் குறிப்பிட்டார்.

# அதிபரின் அசட்டையினால் மாணவர்களுக்கு பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை அதிபரின் அசட்டையினால் பரீட்சார்த்திகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆண்டு 9 மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில் நுட்ப சான்றிதழ் பரீட்சைக்கு தோற்றிய சங்கானைப் பகுதியிலுள்ள ஓர் பாடசாலை பரீட்சார்த்திகளுக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இம் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளை பாடசாலையின் அதிபர் உரிய நேரத்திற்குள் வழங்காமையினால் இவர்களுக்கான வினாத்தாள்கள் இருபது நிமிடங்கள் தாமதித்தே வழங்கப்பட்டுள்ளது. இதனால் இம் மாணவர்கள் பரீட்சை வினாக்களுக்கு முழுமையாக பதிலளிக்க முடியாதுபோய் விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.அரசஅதிபர் கொழும்பு பயணம்

யாழ் மாவட்டத்தின் முக்கிய தேவைகளை எடுத்து விளக்கும் நோக்குடன் யாழ் அரச அதிபர் திரு. பொன்னம்பலம் இந்த வாரம் இறுதிப் பகுதியில் கொழும்பு புறப்படுகின்றார்.

கொழும்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்களை சந்தித்து யாழ்·மாவட்ட நிலைமைகளையும் செயலகம் ஊடான பணிகள் பற்றியும் இவற்றில் உள்ள தடங்கல் பற்றியும் அரச அதிபர் எடுத்துக் கூறுவார்.

முக்கியமாக யாழ் மாவட்டத்தின் அத்தியாவசிய பொருள்களின் தேவை, கப்பல் ்சவை, கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வேறு விடயங்கள் பற்றியும் அவர் எடுத்துக் கூறுவார் எனத் தெரிய

# பிரேமாகொலைதொடர்பாக ஆறுபேர் மீது வழக்கு

## புலனாய்வு பொலிசார் தெரிவிப்பு

முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆறு சந்தேக நபர்களுக்கு எதிராக விரைவில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என இச்சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்தி வரும் குற்றப் புலனாய்வு பொலிசார் கொழும்பு மேலதிக நீதிவானிடம் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி குற்றப் புலனாய்வுப் பொலிசார் மேலும் கூறுகையில், இக்கொலை தொடர்பான விசாரணையில் மேலும் இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்படவேண்டி இருப்பதாகவும் தெரிவித்தனர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-12-19**

**திங்கள் இரவு**

08-01 - தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி

08-20 - தாயகப் பாடல்கள்

08-30 - செய்திகள்

08-40 - தரிசனம் - நிகழ்ச்சியில் கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களுடனான செவ்வி

09-00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

**1994-12-20**

செவ்வாய் காலை

# அடுத்த வருட ஆரம்பத்தில் வடபகுதியில் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டு ஆரம்பப் பகுதியில் வடமாகாணத்தில் புதிதாக புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக வங்கியும் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களும் இணைந்து புதிய அரசாங்கத்தின் உதவியுடன் வடக்கில் புதிய புனரமைப்பு வேலைகளில் ஈடுபடும் எனத் தெரிய வருகின்றது.

பாதைகள், வீடுகள், காரி

மேலும் பலபகுதிகளுக்குபுனரமைப்பு வேலைகளில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாக அறியப்படுகின்றது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களை பார்வையிட்டு இது சம்பந்தமாக ஆராயும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

யாழ். மாவட்டத்திற்கு உலக வங்கியின் புனரமைப்பு குழு அடுத்த மாதம் வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சந்திரிகா

துதல் தொடர்பாக அரசாங்கம் பிரகடனம் ஒன்றைச் செய்யும் எனவும், அதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளும் போர் இடை நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பர் எனவும் தெரியவருகின்றது.

## அரசின்

ஏற்பட வேண்டும் எனவும்

# மரண அறிவித்தல்கள்

## தம்பு நடராசா

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் இணுவில் கிழக்கு அங்கிளிப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவருமான தம்பு நடராசா (18-12-94) நேற்று காலமானார். இவர் சிவபாக்கியத்தின் (சின்ன தங்கச்சி) அன்புக்கணவரும், நவரத்தினராசா (சுவிஸ்), சிவலோகநாதன் (சுவிஸ்), சண்முகராசா, சிவகாமசுந்தரி, சிறீகந்தராசா, மகேஸ்வரி, சிறீரஞ்சன் (சுவிஸ்), செல்வராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும், புஷ்பராணி, தங்கரத்தினம், பாமா, சாந்தினி, நாகநாதபிள்ளை, கந்தசாமி, குலசேகரம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-12-94 இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் - இணுவில்

1994-12-20
செவ்வாய் காலை

07-02 - மாவீரவணக்கம்
07-15 - இன்றைய தாரகை
07-30 - செய்திகள்
07-35 - பத்திரிகைச் செய்திகள்
07-40 - தாயகப் பாடல்கள்
08-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

வருகின்றது.

பாதைகள், வீடுகள், காரியாலயங்கள், குளங்கள், நகரங்கள் ஆகியவற்றுடன்

உலக வங்கியின் புனரமைப்பு குழு அடுத்த மாதம் வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(தி), (பா)

# தொலைதொடர்புஏற்படுத்த அரச அதிபர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்திற்குள்ளும் வெளியிலுமானஉள்ளகத் தொடர்பு (Intercom) வெளியிடத் தொடர்பு (Wireless) வசதிகளை யாழ். செயலகத்திற்கு ஏற்படுத்துவதற்கு யாழ் அரச அதிபர் திரு. பொன்னம்பலம் நடவடிக்கை எடுக்கவுள்ளார்.

யாழ் செயலக வேலைகளை மிகத்துரிதகதியில் செய்வதற்கும் யாழ். குடாநாட்டில் உடனுக்குடன் ஏற்படுகின்ற பிரச்சினைகளை கொழும்புடன் தொடர்பு கொண்டு தீர்த்துக் கொள்வதற்கும் மேற்படி வசதிகள் இன்றியமையாததாக உள்ளது

எனவே இவ்வாறான வசதிகளை மேற்கொள்ளும் பட்சத்தில் பெரும்சிரமங்கள் தவிர்க்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது

இதற்கான ஒழுங்குகளை கொழும்பில் அரச உயர் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தி வசதிகளை பெற்றுக் கொள்ள முயற்சியை மேற்கொள்வார் என தெரியவருகின்றது.

(பா) (தி)


## யாழ் வன்னி தொடர்பு சேவை

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப்பகுதிக்கும் செய்திகள் (தந்தி) பரிமாற்றம் செய்வதற்கு யாழ். ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலும், கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அருகாமையிலும் உள்ள கருமபீடங்களிலும். ஓமந்தை சோதனை நிலையத்திலுள்ள கருமபீடத்திலும் செய்திகள் ஏற்கப்படுகின்றன.

1. சலுகை செய்திகள் முதல்15சொற்களுக்கும் ரூபா 15/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 2/-ம் அறவிடப்படும்

2. வழமைச் செய்திகள் முதல் 10 சொற்களுக்கு ரூபா 100/-ம் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5/-ம் அறவிடப்படும்

3. வியாபாரச் செய்திகள் முதல் 10 சொற்களுக்கு ரூபா 200/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 15/-ம் அறவிடப்படும்

(மேற் கூறப்பட்ட 1, 2ற்குரிய பதில் பெறுவதற்கு ரூபா100/-ம், 3ற்கு ரூபா 200/-ம் அறவிடப்படும்)

**அவசர கட்டணம் அறவிடப்படும் மேற்குறிப்பிட்ட செய்திகள் உடன் விநியோகிக்கப்படும்.**

மேலதிக விபரங்களை அந்த அந்த கருமபீடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-10872)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம், இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# தொழிலாளி படுகாயம்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படும்போது தொழிலாளி ஒருவர் காலில்படுகாயமடைந்தார்.

இழுவைப்படகுக்கும் கப்பலுக்கும் இடையில் கால் சிக்கிக்கொண்டபோதே நேற்று இவ் விபத்து ஏற்பட்டது.

கொட்டடியைச்சேர்ந்த கி. ஜெயக்குமார் (வயது23) என்பவர் காலில் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

(யோ)

**அரசின்**

ஏற்பட வேண்டும் எனவும் அவ்அமைப்பு அரசாங்கத்திடம் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் தனது சமாதானத் திட்டத்தை உண்மையில் நடைமுறைப்படுத்த விரும்பினால்

ஃ தமிழ் மொழி அரச கரும மொழி என அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ளது இதனை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

ஃ கடந்த கால அரசின் நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களிற்கு இழப்பீடு வழங்குவது குறித்து ஆராய குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இக்குழு மக்களிடம் நேரடியாகச் சென்று பேச்சுக்களை நடத்த வேண்டும்.

ஃ வடக்கு - கிழக்குயுத்தத்தில் அரசாங்கதரப்புப் படையினர் மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் அப்பாவி மக்கள் குழுக்களாக கொலை செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

ஃ வடக்கு மக்களின் சுதந்திரமான நடமாட்டம் என்பவற்றுக்கு தடைநீக்கப்படுவதுடன், பொருள்கள் மருந்துகள் மீதான தடை நீக்கவேண்டும்.

ஃ யுத்தத்தினால் தொழில்களை இழந்தோருக்கு நிவாரணம்வழங்கப்பட வேண்டும்.

என அக்குழு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

**வீரச்சாவு**

நடைபெற்றமோதலில் விழுப்புண் அடைந்திருந்த விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் நேற்று முன்தினம் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் சத்தியசீலன் (ஜேசுராசா அன்ரனி பிராடோ-மன்னார்) எனும் போராளிக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

கள் பற்றியும் அவர் எடுத்துக் கூறுவார் எனத் தெரியவருகிறது.

(தி, பா)

# திருப்பி அனுப்ப நடவடிக்கை

இவ்வாண்டிற்கென மாணவர்களுக்கு வழங்குவதற்கென கல்வியமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட இலவச சீருடைத் துணிகளில் எஞ்சியவற்றை கொழும்பிற்கு அனுப்பிவைக்க யாழ் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

**பேச்சுவார்த்தை**

இதேவேளை முதலாவது சுற்றுப் பேச்சுகளில் கலந்து கொண்ட அதே பிரதிநிதிகள் தான் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களுக்காக யாழ்ப்பாணம் செல்லக் கூடும்என்று கொழும்புபத்திரிகைகள்ஊகம் வெளியிட்டிருந்தது தெரிந்ததே. எனினும் முதல் சுற்று பேச்சுக்களில்கலந்துகொண்ட அரச தரப்பு பிரதிநிதிகளில் ஒருவர் உடல்நலம் குன்றி இருக்கிறார் என்றும் அதனால் அவருக்குப் பதிலாக வேறொருவரே பேச்சுக்களில் கலந்து கொள்ளக் கூடும் என்றும் இப்போதுகூறப்படுகிறது என பி.பி.ஸி. தெரிவித்தது.

**ராணுவத்**

தால் மோதி கொலை செய்யத் திட்டமிடப்பட்டதாகவும், எனினும் அவர் திடீரென பாதையை மாற்றிக் கொண்டதால் அது சாத்தியப்படவில்லை எனவும் மேலும் கூறப்பட்டுள்ளது.

**அமெரிக்க**

ரிக்க தூதுவரகம் முன்பாக கத்தோலிக்க, பௌத்த மதங்களைச்சேர்ந்த மதகுருமார் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்

கத்தோலிக்க - பௌத்த மதகுருமார்களான சுமார் 100 பேர் இவ் ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர். இவ் ஆர்ப்பாட்டம் கடந்த புதனன்று இடம்பெற்றுள்ளது,

1 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் - இணுவில் காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அங்கிளிப்பாய்,
இணுவில் கிழக்கு. (10440)

ந சண்முகராசா
(மகன்)

## திரு. நா. தம்பிப்பிள்ளை (O. A.)

அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும், பரந்தனில் வசித்து வந்தவரும், ஓய்வுபெற்ற நிர்வாக சேவை உத்தியோகத்தருமான திரு. நா. தம்பிப்பிள்ளை (O. A.) அவர்கள் 17-12-94-ல் பரந்தனில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் கணவராவார். இறுதிக்கிரியைகள் 19-12-94 இன்று பரந்தனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மருமகன்

160-ம் கட்டை,
பிரதான வீதி, பரந்தன். (10439)

## திருமதி செல்லையா சின்னத்தங்கம்

(நெல்லியான் சுழிபுரம்)

திருமதி செல்லையா சின்னத்தங்கம் (16-12-94) அன்று காலமானார். இவர் செல்லையாவின் அன்பு மனைவியும், திருமதி நாகரத்தினம் நடன சண்முகம் (பறளாய் றோட்)'திருமதி இராசையா செல்வரட்ணம், **M. S.** இராசரத்தினம், **M.S.** விஜயரத்தினம், பாலரத்தினம், சந்தணகுமார் (ஜேர்மனி), சிவகுமார் (ஆசிரியர், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஐயாத்துரை இராசையாவின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் 19-12-94 (இன்று) 12 மணியளவில் மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொன்னாலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:

ஐ. இராசையா
[மருமகன்]

மடத்தடி லேன்,
மானிப்பாய். [10441]